[2014 டிசம்பர் 5

**(ஆ) காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைப்பதோடு மேகதாதுவில் கர்நாடக அரசும், பாம்பாற்றில் கேரள அரசும் அணை கட்ட அனுமதி வழங்கக் கூடாதென மத்திய அரசை வலியுறுத்துதல்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். அடுத்த தீர்மானத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிவார்கள். இரண்டு தீர்மானங்களின்மீதும் மற்ற உறுப்பினர்கள் சேர்த்தே பேசலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவேரி போல் பெருமை படைத்த மாண்புமிகு மக்கள் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக மக்களுக்கு, காவேரி போல் நலம் சேர்த்து, காவேரி போல் வளம் சேர்த்து, காவேரி போல் புகழ் சேர்க்கும் மக்கள் தலைவர் ஆவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

“உழவரோதை மத கோதை
உடைநீரோதை தண்பதங்கொள்
விழவரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி”

என இளங்கோவடிகளால் எடுத்துரைக்கப்பட்ட பல்வேறு ஓசைகளுடன் காவேரி நதி பொங்கிப் பாய்ந்து, டெல்டா மாவட்டங்களை வளமாக்குவதுடன் விவசாயிகளின் வாழ்வாதாரமாகவும் விளங்குகிறது.

தமிழ்நாட்டின் ஜீவாதார உரிமைப் பிரச்சினையாக விளங்குவது காவேரி நதிநீர்ப் பிரச்சினை. சென்னை மாகாணத்திற்கும், மைசூர் சமஸ்தானத்திற்கும் இடையே 1892 மற்றும் 1924 ஆம் ஆண்டைய ஒப்பந்தங்கள் காவேரி நதிநீரில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமையைத் தெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

1924 ஆம் ஆண்டைய ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றாமல், 1960–களின் பின்பகுதியிலும், 1970–களின் தொடக்கத்திலும் மத்திய அரசின் ஒப்புதல்

2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இல்லாமலும் காவேரி நதியில் உரிமை உள்ள மாநிலங்களைச் கலந்தாலோசிக்காமலும், தன்னிச்சையாக பல்வேறு அணைகளை கர்நாடக அரசு கட்ட உத்தேசித்தது. ஆண்டுக்காண்டு விவசாய நிலங்களின் பரப்பினையும் கர்நாடக அரசு அதிகரித்துக்கொண்டே சென்றது.

இதனையடுத்து, 1956 ஆம் ஆண்டைய மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்த் தாவா சட்டத்தின்படி, நடுவர் மன்றம் ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்று 1986 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தலைமையிலான தமிழ்நாடு அரசு, மத்திய அரசினைக் கேட்டுக்கொண்டது. இந்தக் கடிதத்தின்மீது மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாடு காவேரி நீர்ப் பாசன விளைபொருட்கள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்பு சங்கத்தினால் தொடுக்கப்பட்ட வழக்கில், தமிழ்நாடு அரசு தன்னை இணைத்துக் கொண்டது. இவ்வழக்கினை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரிப் பிரச்சினைக்கு தீர்வு காண நடுவர் மன்றத்தை ஏற்படுத்துமாறு 1990 ஆம் ஆண்டு ஓர் உத்தரவினைப் பிறப்பித்தது. உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவினைத் தொடர்ந்து, 1986 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழக அரசால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு உயிரூட்டப்பட்டு, மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டு, காவேரி நடுவர் மன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதனையடுத்து, காவேரி நடுவர் மன்றம் 25–6–1991 அன்று ஓர் இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது. இந்த ஆணையில், மேட்டூர் அணைக்கு 205 டி.எம்.சி. அடி நீர் கிடைப்பதை உறுதி செய்யும்வகையில் கர்நாடகா தனது நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என்றும், மாதாந்திர மற்றும் வாராந்திர அடிப்படையில் நீர் விடுவிக்கப்பட வேண்டும் என்றும்; இந்த இடைக்கால ஆணை இறுதித் தீர்ப்பு அளிக்கும் வரையில் நடைமுறையில் இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இவ்வாணையை ஏற்றுக்கொண்டது. எனினும், கர்நாடக அரசு, இந்த இடைக்கால ஆணையை எதிர்த்து அவசரச் சட்டம் இயற்றியபோது, மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள், கர்நாடகத்தின் அவசரச் சட்டம், அரசமைப்பின்படி

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

செல்லத்தக்கதா எனவும், நடுவர் மன்ற இடைக்கால ஆணையினை சட்டப்படி மத்திய அரசிதழில் வெளியிடலாமா என்றும் உச்ச நீதிமன்றத்தின் கருத்தினைக் கோரினார்.

பிற்பகல் 3–25

இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணை செல்லும் என்றும், அது மத்திய அரசிதழில் வெளியிடப்பட வேண்டும் என்றும், கர்நாடக அரசு இயற்றிய சட்டம் செல்லாது என்றும் 22–11–1991 அன்று மத்திய அரசிற்குக் கருத்துரை வழங்கியது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது உறுதியான நடவடிக்கையின் காரணமாக அதனைத் தொடர்ந்து, 10–12–1991 அன்று காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது.

இந்த ஆணையைச் செயல்படுத்துவதற்காக ஓர் அமைப்பை உடனடியாக ஏற்படுத்துவதற்கு மத்திய அரசுக்கு ஆணை பிறப்பிக்கும்படி உச்ச நீதிமன்றத்தில், 1992–ல் ஒரு சிவில் வழக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணைப்படி, தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்டது. காவேரி நதிநீர் ஆணையம் மற்றும் அதற்கு உதவுவதற்காக காவேரி கண்காணிப்புக் குழு என்ற அமைப்புகள் 11–8–1998 அன்று மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆணையம், 15 ஆண்டுகளில், 7 முறை கூடிய போதிலும் மாதாந்திரவாரியாக குறிப்பிடப்பட்ட நீர் தமிழ்நாட்டிற்கு விடுவிப்பதை உறுதி செய்யவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

காவேரி நடுவர் மன்றம் 16 ஆண்டுகள் இவ்வழக்கு தொடர்பாக சம்பந்தப்பட்ட மாநிலங்களின் வாத, பிரதிவாதங்கள் கேட்டறிந்தும், ஆவணங்கள், புள்ளிவிவரங்கள் போன்றவற்றை நன்கு ஆராய்ந்தும், 1956 ஆம் ஆண்டைய பன்மாநில நதிநீர்த் தாவா சட்டத்தின் பிரிவு 5(2)–ன்படி இறுதி ஆணையை 5–2–2007 அன்று பிறப்பித்தது.

இந்த ஆணையில், காவேரி உண்மை நிலை அறியும் குழுவின் அறிக்கையைச் சார்ந்து காவேரியின் மொத்த நீர்வளம் 50 விழுக்காடு நம்பகத்தன்மை அடிப்படையில், 740 டி.எம்.சி. அடி நீர் என்பதன்பேரில், மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் தமிழ்நாட்டிற்கு 419 டி.எம்.சி. அடி நீரும், கர்நாடகாவிற்கு 270

டி.எம்.சி. அடி நீரும், கேரளாவிற்கு 30 டி.எம்.சி. அடி நீரும், புதுச்சேரிக்கு 7 டி.எம்.சி. அடி நீரும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தவிர்க்க முடியாத உபரி நீர் 4 டி.எம்.சி. அடி நீர், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக 10 டி.எம்.சி. அடி நீர் என மொத்தம் 740 டி.எம்.சி. அடி நீர் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இந்த இறுதி ஆணையை செவ்வனே செயல்படுத்துவதற்கு ஏதுவாக, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்கவும் பரிந்துரை செய்தது.

கர்நாடக, கேரள மாநிலங்கள் நடுவர் மன்ற இறுதி ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ஏப்ரல் 2007–ல் சிறப்பு மேல் முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்தன. தமிழ்நாடு அரசும் நடுவர் மன்ற இறுதி ஆணையின்மீது ஒரு சில பகுதிகளை மேல் ஆய்வு செய்யக் கோரி 2007 ஆம் ஆண்டு மே மாதம் ஒரு சிறப்பு மேல் முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தது. இந்த மனுக்களை உச்ச நீதிமன்றம் 7–5–2007 அன்று ஏற்றுக்கொண்டது. இந்த மனுக்கள் இன்னமும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

கடந்த 2011 ஆம் ஆண்டு, இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 14–6–2011 அன்று பாரதப் பிரதமர் அவர்களை புது டில்லியில் நேரில் சந்தித்து, “காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்றும், இந்த ஆணையை செவ்வனே செயல்படுத்த காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்க வேண்டும்” என்றும் வலியுறுத்தினார்கள். மேலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசின் அரசிதழில் வெளியிட வேண்டும் என்றும் காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என்றும் கோரி, பாரதப் பிரதமர் அவர்களை 17–10–2011, 20–12–2012, 22–12–2012, 22–2–2013, 11–3–2013, 17–5–2013, 2–9–2013, 3–9–2013 மற்றும் 13–6–2014 ஆகிய நாளிட்ட கடிதங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டார்கள்.

பிற்பகல் 3–30

புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளினாலும், உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டாலும், நடுவர் மன்றத்தினுடைய இறுதி ஆணை

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

19–2–2013 அன்று மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டது. இதனால், முதற்கட்டமாக காவேரி பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமை நிலைநாட்டப்பட்டதோடு அல்லாமல், காவேரி நதியினால் பாசனப் பயன்பெறும் விவசாயப் பெருங்குடி மக்களினுடைய வாழ்வாதாரம் மேம்பட வழிவகை செய்யப்பட்டது.

எனவேதான், நீதியின் துணை கொண்டு, நியாயத்தை வென்று, சட்டத்தின் துணை கொண்டு, சரித்திரம் படைத்து, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்து, வரலாற்றுச் சாதனை படைத்த *(மேசையைத் தட்டும் ஒலி)* மக்களின் முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும்வகையில் தஞ்சை தரணியிலே மாபெரும் விழாவினை 9–3–2013 அன்று விவசாய சங்கங்கள் அனைத்தும் ஒன்றுகூடி நடத்தின. அந்த மகத்தான விழாவில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை "பொன்னியின் செல்வி" என்று புகழ்ந்து பாராட்டி சிறப்பித்தார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மத்திய அரசு, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை அமைக்காததால் இவற்றை உடனடியாக அமைக்கும்படி மத்திய அரசுக்கு ஆணையிடக் கோரி, இடைக்கால மனு ஒன்றை 18–3–2013 அன்று உச்ச நீதிமன்றத்தில் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களது ஆணையின்படி தமிழ்நாடு அரசு தாக்கல் செய்தது. இம்மனுவினை 10–5–2013 அன்று விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும்வரையில், 19–2–2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை செயல்படுத்த ஒரு தற்காலிக ஏற்பாடாக Pro tem measure மத்திய நீர் ஆதார அமைச்சகச் செயலாளரின் தலைமையில், மாநில தலைமைச் செயலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, காவேரி மேற்பார்வைக் குழு–Supervisory Committee ஒன்றை அமைக்க ஆணையிட்டது. இந்த ஆணையின்படி, மத்திய நீர் ஆதாரத் துறை செயலாளர் அவர்களை தலைவராகக் கொண்டும், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மற்றும் புதுச்சேரி மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் மத்திய நீர்வளக் குழுவின் தலைவர் ஆகியவர்களை உறுப்பினர்களாகக் கொண்டும் ஒரு மேற்பார்வைக் குழுவினை மத்திய அரசு அமைத்தது. இவ்வமைப்பு ஓர் இடைக்கால ஏற்பாடு மட்டுமே என்பதால், ஒரு நிரந்தர ஏற்பாடாக,

2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்க உத்தரவு வழங்க வேண்டி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணையின்படி, உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு ஓர் இடைக்கால மனுவினை அதாவது I.A.No.*7/2013*–ஐ, *11–11–2013* அன்று தாக்கல் செய்தது. உச்ச நீதிமன்றம் இந்த இடைக்கால மனுவினை சிவில் மேல்முறையீட்டு வழக்குகளுடன் சேர்த்து விசாரிக்கலாம் என்று உத்தரவிட்டது.

காவேரி நடுவர் மன்றத்தின் *5–2–2007* ஆம் நாளிட்ட இறுதி ஆணை, மத்திய அரசின் அரசிதழில் *19–2–2013* அன்று வெளியிட்ட பின்னர் அவ்வாணையில் குறிப்பிடப்பட்டுள்ள காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டுமென்று மத்திய அரசை புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தபோதிலும், இவை அமைக்கப்படாத காரணத்தாலும், உச்ச நீதிமன்ற ஆணைப்படி ஏற்படுத்தப்பட்ட தற்காலிக ஏற்பாடான மேற்பார்வைக் குழு–Pro tem Supervisory Committee திறம்பட செயல்படாத காரணத்தினாலும், காவேரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க வேண்டும் என *3–6–2014* அன்று பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்தபோது விரிவாக எடுத்துரைத்து, வலியுறுத்தி கோரிக்கை மனுவை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்தார்கள்.

கர்நாடக முதலமைச்சர், பாரதப் பிரதமருக்கு *10–6–2014* அன்று அளித்த கோரிக்கை மனுவில், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை அமைக்கக் கூடாது என கோரிக்கை விடுத்தார். அடுத்து, *1956* ஆம் ஆண்டைய பன்மாநில நதிநீர் தாவா சட்டத்தின்படி, நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட பின் அது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பாணைக்கு ஒப்பாகும் என்பதால், மேற்படி அமைப்புகளை உடனடியாக அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், கர்நாடக அரசு தெரிவித்துள்ள கருத்துகளுக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதால் அவை நிராகரிக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்து, இவ்விரு அமைப்புகளையும் உடன் அமைக்கும்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை *13–6–2014* அன்று மீண்டும் கேட்டுக்கொண்டார்கள்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

*பிற்பகல் 3–35*

இதற்கிடையில் கர்நாடக அரசு மேகதாது என்னுமிடத்தில் புதிய அணைகளைக் கட்டப் போவதாக செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. கர்நாடக அரசு ஏற்கெனவே தன்னிச்சையாக சிவசமுத்திரம் மற்றும் மேகதாது நீர் மின் திட்டங்களைச் செயல்படுத்தப்போவதாக அறிய வந்தபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30–3–2012 அன்று இம்மாமன்றத்தில் இதே பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டுவந்த சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளித்து ஆற்றிய உரையில், கர்நாடக அரசு காவேரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் புதிய அணையைக் கட்ட இயலாது என்றும், அவ்வாறு கர்நாடக அரசு முயற்சிக்குமேயானால் தமிழகம் அதனை எந்தச் சூழ்நிலையிலும் அனுமதிக்காது என்றும் அறிவித்ததைப் பேரவை உறுப்பினர்களுக்கு நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவேரிப் படுகையில் கர்நாடகத்தின் கிருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்கத்திற்கும், தமிழ்நாட்டின் மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கும் இடையில் உள்ள ஆற்றுப் பகுதியில் நீர்மின் நீர்த்தேக்கங்கள் அமைக்க ஏதுவாக நிலமட்ட சரிவு அமைந்துள்ளது. இதனைப் பயன்படுத்த தமிழ்நாடு ஒகேனக்கல் நீர்மின் திட்டமும், கர்நாடகம் மேகதாது நீர்மின் திட்டமும் செயல்படுத்த திட்டங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே தயாரிக்கப்பட்ட போதிலும், பன் மாநில நதிநீர் தாவா நிலுவையில் இருந்ததால், இத்திட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை.

மத்திய அரசு, 1998 ஆம் ஆண்டு ஒரு ஒட்டுமொத்த திட்டத்தை இரு மாநிலங்களின் பரிசீலனைக்கு அனுப்பியது. இதன்படி நான்கு நீர்மின் திட்டங்கள், கர்நாடகத்தில் சிவசமுத்திரம் மற்றும் மேகதாது திட்டங்கள், அதற்குக்கீழ் தமிழ்நாட்டில் இராசிமணல் மற்றும் ஒகேனக்கல் திட்டங்கள் ஆகியவற்றை தேசிய நீர்மின் கழகத்தின் மூலம் சுமார் 1,150 மெகா வாட் மின் உற்பத்தி செய்யும் வகையில் செயல்படுத்தலாம் என்று மத்திய அரசு உத்தேசித்தது. மேற்கூறிய

மின் திட்டங்கள் தேசிய நீர்மின் கழகம் கட்டி முடித்து செயல்படுத்தவும், பராமரிக்கவும் வகை செய்யப்பட்டது.

கர்நாடகமும், தமிழக அரசும் இதனை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில், ஒரு வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தமும் தயாரிக்கப்பட்டது. இதனிடையே, கர்நாடக அரசு, நடுவர் மன்றத்தில் ஒரு தாக்கீது மூலம் இத்திட்டங்களுக்கான கள ஆய்வுப் பணிகளை தேசிய நீர்மின் கழகம் மேற்கொள்ள தங்கள் அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்று கர்நாடக அரசு தெரிவித்தது. தமிழக அரசும் இத்திட்டங்களை ஒட்டுமொத்தமாக தேசிய நீர்மின் கழகம் நிறைவேற்ற ஒப்புதல் அளித்தது. தேசிய நீர்மின் கழகம் இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான வரைவு ஒப்பந்தம் ஒன்றைத் தயாரித்து, இரு மாநிலங்களுக்கும் அனுப்பியது. இதில் சில மாற்றங்களுடன், முக்கியமாக இந்த ஒப்பந்தம் நிரந்தரமானது என்றும் நான்கு நீர்மின் திட்டங்களை இரண்டு கட்டமாக, அதாவது கர்நாடகப் பகுதியிலே இருக்கின்ற சிவசமுத்திரம் மற்றும் தமிழகம் பகுதியில் இருக்கின்ற ஒகேனக்கல் திட்டங்கள் முதல் கட்டமாகவும், மேகதாது, இராசிமணல் திட்டங்கள் இரண்டாவது கட்டமாகவும் செயல்படுத்தலாம் என்று கூறி, தமிழக அரசு வரைவு ஒப்பந்தத்திற்கு 2004 ஜூலைத் திங்களில் இசைவு தெரிவித்தது.

காவேரி நடுவர் மன்றம், 1956 ஆம் ஆண்டைய பன்மாநில நதிநீர் தாவா சட்டம் 5(2) பிரிவின்படி, 5—2—2007 அன்று அளித்த தனது இறுதி ஆணையில் இந்த நீர்மின் திட்டங்களைக் கருத்தில்கொண்டு கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது:

"(XII) மாநிலங்களின் பொது எல்லையில் கர்நாடக அரசும், தமிழ்நாடு அரசும் சில நீர் மின் திட்டங்களை அமைக்க தேசிய நீர்மின் கழகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகக் கூறியுள்ளன. இந்நிலையில் மேற்கூறிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, நீர்த்தேக்கங்களில் நீர் தேக்க ஆரம்பித்தவுடன், கீழ் மாநில பாசன உரிமை பாதிக்காத வகையில் மாதாந்திர அடிப்படையிலும் நடுவர் மன்றம் கூறியுள்ள அளவுபடியும் நீர் வெளியேற்ற விதிமுறைகள் அமைக்க வேண்டும்." என்று கூறியிருந்தது.

நடுவர் மன்ற இறுதி ஆணை வந்தவுடன், கர்நாடக அரசு சட்டப் பிரிவு 5 (3)—ன்படி ஒரு மனுவை நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்தது. இதன்படி கர்நாடகத்தில் அமையும் இரு நீர்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

மின் திட்டங்கள் (சிவசமுத்திரம் மற்றும் மேகதாது) அதன் எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ளன என்றும், இந்த நீர் மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டால்தான் நடுவர் மன்றத்தின் ஆணையின்படி தமிழ்நாட்டிற்கு மாதாந்திர அடிப்படையில் குறிப்பிட்டுள்ள நீர் அளவை வழங்குவது சாத்தியமாகும். எனவே தேசிய நீர் மின் கழகத்துடன் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் கர்நாடகத்திற்கு இசைவாக அமையவில்லை என்றால், மேகதாது நீர் மின் திட்டத்தை கர்நாடகமே தன்னிச்சையாகச் செயல்படுத்தலாம் என்று விளக்கம் அளிக்க வேண்டும் என்று கோரியுள்ளது. இம்மனு நடுவர் மன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், கர்நாடக அரசு, சிவசமுத்திரம் ஆற்றுப்போக்கு நீர் மின் திட்டம் மற்றும் மேகதாது நீர் மின் திட்டத்தைத் தன்னிச்சையாகச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்வதாக நாளேடுகளில் செய்திகள் வந்தன. இதன் அடிப்படையில், கர்நாடகம் தன்னிச்சையாக இந்த இரு மின் திட்டங்களையும் எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும், அப்பகுதியில் அமையும் நான்கு நீர்மின் திட்டங்களும், தேசிய நீர்மின் திட்டக் கழகம் போன்ற ஒரு நடுநிலையான துறையினால்தான் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறி, தமிழ்நாடு உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுவைத் (I.A.) தாக்கல் செய்தது. கர்நாடகம் மீண்டும் சிவசமுத்திரம் ஆற்றுப்போக்கு நீர்மின் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த முயற்சிப்பதாக செய்திகள் வந்ததின்பேரில், மற்றொரு மனுவையும் (Additional Affidavit) உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது. இம்மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

பிற்பகல் 3–40

மாநில அரசுகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டு மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், கர்நாடக அரசு, காவேரி நீரவாரி நிகமம் என்ற அமைப்பின் வாயிலாக மேகதாது நீர்மின் திட்டம் மற்றும் வேறு பல திட்டங்களை எடுத்துக்கொள்வதாக பத்திரிகையில் செய்தி வந்ததையடுத்து, இத்திட்டங்களை தமிழக அரசின் முன் அனுமதியின்றி எடுத்துக்கொள்ள வேண்டாமென கர்நாடகத்திற்கு அறிவுரை வழங்கவும், காவேரி மேலாண்மை வாரியம் நிரந்தரமாக அமைக்கப்பட்டு செயல்படும்வரை கர்நாடகத்தின் எந்தத்

2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

திட்டத்திற்கும் அனுமதி வழங்குவதை நிறுத்தி வைக்கும்படி மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்திற்கு அறிவுரை வழங்கவும் கோரி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைய பாரதப் பிரதமர் அவர்களை 2–9–2013 மற்றும் 3–9–2013 அன்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். இதைத் தொடர்ந்து, கர்நாடக தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், மத்திய நீர் வளத் துறை செயலாளர் அவர்களுக்கும் முறையே 6–9–2013 மற்றும் 17–9–2013 அன்று கடிதங்கள் அனுப்பப்பட்டன.

மத்திய நீர் வள அமைச்சகம் 7–10–2013 அன்று அனுப்பிய பதில் கடிதத்தில், சிவசமுத்திரம் மற்றும் மேகதாது திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை ஏதும் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒப்புதல் கோரி மத்திய நீர் வளக் குழுமத்திற்கு கர்நாடக அரசிடமிருந்து வரப் பெறவில்லை எனவும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்க, மத்திய சட்டம் மற்றும் நீதித் துறையின் ஆலோசனையுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தது. மீண்டும், 9–10–2013 அன்று இத்திட்டங்களின் விரிவான அறிக்கைகளை வழங்கவும், மேல்முறையீட்டு மனுக்களில் தீர்வு காணும்வரை இத்திட்டங்களை மேற்கொள்ளாதிருக்கும்படி கர்நாடகத்திற்கு அறிவுரை வழங்கக் கோரி மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது.

காவேரி நதியானது ஒரு பன்மாநில நதி என்பதால், கீழ்ப்படுகை மாநிலமான தமிழ்நாட்டின் இசைவு பெறாமலும், மத்திய அரசின் ஒப்புதல் பெறாமலும் கர்நாடக அரசு எந்தப் புதிய திட்டத்தையும் மேற்கொள்ள இயலாது.

கர்நாடக அரசு ஹேமாவதி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளிலிருந்து கிடைக்கக்கூடிய உபரி நீரை குடிநீர் வழங்கலுக்காக உபயோகப்படுத்தப் போவதாகத் தெரிய வந்தவுடன், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் இசைவில்லாமல் கர்நாடக அரசு எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்தக்கூடாது எனவும், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் கர்நாடகாவின் எந்த ஒரு திட்டத்திற்கும் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையில் அனுமதி அளிக்கக்கூடாது எனவும் 2–9–2013 ஆம் நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

கர்நாடக அரசு காவேரி நீரவாரி நிகமம் என்ற அமைப்பின் வாயிலாக அர்காவதி நதியை புனரமைத்தல் மற்றும் ஹேமாவதி கால்வாய்களை நவீனப்படுத்துதல் போன்றவற்றிற்காக ஒரு விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்கும்பொருட்டு விருப்பம் கோரும் அறிவிப்பை (Expression of Interest) கோரியுள்ள விவரம் பத்திரிகைகளில் வெளிவந்தபோது, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் 3–9–2013 அன்று பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் கர்நாடகாவின் இத்தகைய செயலை காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கும் வரையில் நிறுத்தி வைக்குமாறும், ஏற்கெனவே கோரப்பட்டுள்ள அறிவிப்பை நிறுத்தி வைக்குமாறும் மற்றும் வேறு எந்த ஒரு திட்டத்திற்கும் இத்தகைய அறிவிப்பைக் கோராமல் இருக்குமாறும் கர்நாடக அரசிற்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொண்டார்கள். மேலும், இந்தத் திட்டங்களைத் தவிர, கர்நாடக அரசு, காவேரி நீரவாரி நிகமம் என்ற அமைப்பின் மூலமாக, பல நவீனமயமாக்கும் திட்டங்கள் மற்றும் இறைவைத் திட்டங்களை (Lift Irrigation works), அதாவது குளங்களை நிரப்பி, குடிநீர்த் தேவைக்குப் பயன்படுத்தும் வகையில் திட்டங்களை எடுத்துக்கொள்வதாக பத்திரிகையில் செய்தி வந்ததை அடுத்து, இத்திட்டங்களின் முழு விவரங்களை வழங்கவும், காவேரி பற்றிய வழக்குகள் முடிவடைந்து காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கும்வரை இத்திட்டங்கள் பற்றிய ஒப்பந்தப்புள்ளி அறிக்கைகளை (Tender Notices) நிறுத்தி வைக்க அறிவுரை வழங்கும்படி 17–3–2014 அன்று மத்திய அரசிற்குக் கடிதம் அனுப்பப்பட்டது. அதேபோன்று கர்நாடக அரசிற்கும் கடிதம் அனுப்பப்பட்டது.

இக்கடிதங்களுக்குப் பதில் வராததால், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களது ஆணைப்படி, காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கும் வரையிலும் தமிழகத்தின் அனுமதியில்லாமலும் இத்திட்டங்களை கர்நாடகம் மேற்கொள்ள தடை விதிக்கக் கோரியும், மேல்முறையீட்டு மனுக்களில் தீர்வு ஏற்பட்டு காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கும் வரையிலும் தற்போதைய நிலை கடைப்பிடிக்க வேண்டுமென கர்நாடக அரசுக்கு உத்தரவு வழங்கவும் கோரி ஒரு மனுவை உச்ச நீதிமன்றத்தில் 11–4–2014 அன்று தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது.

2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*பிற்பகல் 3–45*

நிலைமை இவ்வாறு இருக்கும்பொழுது, கர்நாடக அரசு, நீர் மின் திட்டங்கள் பற்றி ஏதும் தெரிவிக்காமல் குடிநீர்த் திட்டம் என்ற போர்வையில், மேகதாது என்னுமிடத்தில் புதிதாக இரண்டு அணைகள் கட்ட உள்ளதாகவும், இதற்கென, தொழில்நுட்ப சாத்திய அறிக்கை தயார் செய்வதற்காக "விருப்பம் கோரும் அறிவிப்பை (Expression of Interest)" கோரியுள்ளது எனவும் செய்திகள் வந்ததையடுத்து, மாண்புமிகு பிரதமர் அவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு கர்நாடக அரசின் இத்தகைய நடவடிக்கையை நிறுத்தி வைக்கவும் மற்றும் எந்த ஒரு பாசன, நீர் மின், நீரேற்றுப் பாசனத் திட்டங்கள் மற்றும் குடிநீர் வழங்கல் என்ற போர்வையின் அடிப்படையில் எந்தவொரு திட்டத்தையும் கர்நாடக அரசு தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கர்நாடக அரசிற்கு அறிவுரை வழங்குமாறும், 12–11–2014 அன்று பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் கர்நாடக அரசின் எந்த ஒரு திட்டத்திற்கும் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம் மற்றும் நீர் ஆதார அமைச்சகம், ஒப்புதல் அளிக்கக்கூடாது என அவ்வமைச்சகங்களுக்கு அறிவுறுத்தும்படி அக்கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கர்நாடக அரசு இவ்வாறு புதிய அணைகள் கட்டுவது தொடர்பாகக் கோரியுள்ள தொழில்நுட்ப ஆய்விற்கான "விருப்பம் கோரும் அறிவிப்பை (Expression of Interest)" நிறுத்திவைத்தும், அதன்மீது மேல் நடவடிக்கை ஏதும் தொடரக்கூடாது எனவும் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டம் என்பதன்பேரில் பாசன, நீர் மின் மற்றும் ஏனைய திட்டங்களைக் கர்நாடக அரசு தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் செயல்படுத்தக்கூடாது என அவ்வரசிற்கு 12–11–2014 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம் மற்றும் மத்திய நீர் ஆதார அமைச்சகம் கர்நாடகாவின் திட்டங்களுக்கு தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் அனுமதி வழங்கக்கூடாது எனக் கேட்டுக்கொண்டு 13–11–2014 அன்று மத்திய நீர் ஆதார அமைச்சகத்திற்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

கர்நாடக அரசு இரண்டு அணைகள் கட்டக் கோரியுள்ள தொழில்நுட்ப ஆய்விற்கான விருப்பம் கோரும் அறிவிப்பை (Expression of Interest) திரும்பப் பெற வேண்டுமெனவும், கர்நாடகா–

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

காவேரி படுகைப் பகுதிகளில் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ள திட்டங்களுக்கு மாறாக இவ்விரு அணைகளைக் கட்டும் பணிகளையோ அல்லது வேறு எந்த புதிய திட்டங்களையோ கர்நாடக அரசு மேற்கொள்ளக்கூடாது எனவும்; காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் முடிவுக்கு வரும்வரையிலும் தற்போதைய நிலையே தொடர வேண்டும் என்றும் ஆணை வழங்குமாறு உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு 18–11–2014 அன்று இடைக்கால மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

கர்நாடக அரசு, அதன் 18–11–2014 ஆம் நாளிட்ட கடிதத்தில், ஏற்கெனவே நிலுவையில் உள்ள இடைக்கால மனுவில் உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்காமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்றப் போவதில்லை என்று தெரிவித்துள்ளது.

கர்நாடக அரசின் செயலைப் போன்றே, கேரள அரசும் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மீறும்வகையில் பல்வேறு அணைகள் கட்டும் திட்டங்களைச் செயல்படுத்தப்போவதாக பத்திரிகைகளில் செய்திகள் அவ்வப்போது வெளிவந்தன. அவற்றில் அண்மையில், கேரள அரசு, பாம்பாற்றின் குறுக்கே, பட்டிசேரி என்ற இடத்தில் 2 டி.எம்.சி. அடி கொள்ளளவு உள்ள ஓர் அணையைக் கட்டுவதற்கு பணிகள் துவக்கியுள்ளதாகவும், இதற்கு, கேரள முதலமைச்சர், 3–11–2014 அன்று காணொலி காட்சி வழியாக அடிக்கல் நாட்டியுள்ளதாகவும், 6–11–2014 அன்று பத்திரிகைகளில் செய்திகள் வந்தவுடன், பாரதப் பிரதமருக்கு 8–11–2014 அன்று கேரளாவின் இத்தகைய திட்டம் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மீறும் செயலாகும் என்றும், எந்தவொரு புதிய திட்டமும் காவேரி மேலாண்மை வாரியத்தின் ஒப்புதலுடனும், தமிழ்நாட்டின் முன்இசைவும் பெற்ற பின்னரே செயல்படுத்தப்பட வேண்டும். எனவே, பாரதப் பிரதமர் அவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி எனும் இடத்தில் அணை கட்டும் பணிகளை கேரள அரசு மேற்கொள்ளக்கூடாது எனவும், மற்றும் வேறு எந்தத் திட்டத்தையும் எடுத்துச் செயல்படுத்தக்கூடாது எனவும், கேரள அரசுக்கு அறிவுறுத்தும்படி கடிதம் ஒன்றை நான் அனுப்பியுள்ளேன். மேலும், இக்கடிதத்தில், கேரள அரசு, பாம்பாறு உப படுகையில் கட்ட உத்தேசித்துள்ள அணைகள் பற்றிய அனைத்து விவரங்களைத் தமிழகத்திற்கு அளிக்க வேண்டும் எனவும், மற்றும் காவேரி மேலாண்மை

2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

வாரியம் ஏற்படுத்தப்பட்டபின் தமிழ்நாட்டின் இசைவு பெற்ற பின்னரே இத்தகைய திட்டங்களைக் கேரள அரசு மேற்கொள்ள வேண்டும் என அறிவுரை வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பிற்பகல் 3–50

இதேபோன்று, கேரள அரசுக்கு 8–11–2014 அன்றும், மத்திய நீர் ஆதாரத் துறை அமைச்சகத்திற்கு 13–11–2014 அன்றும் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

கேரள அரசு மற்றும் மத்திய அரசிடமிருந்து பதில் வராத நிலையில், பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு பட்டிசேரியில் அணை கட்டும் பணிகளை நிறுத்தி வைக்குமாறும், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள சிவில் வழக்குகள் முடிவுக்கு வரும் வரையிலும் தற்போதைய நிலையே தொடர வேண்டும் என கேரள அரசிற்கு உத்தரவிடுமாறும் கோரி, உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு இடைக்கால மனு ஒன்றை 28–11–2014 அன்று தாக்கல் செய்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில், காவேரி நடுவர் மன்றத்தின் 5–2–2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணை, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் தீவிர முயற்சிகளாலும், உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டாலும் மத்திய அரசு அதன் அரசிதழில் 19–2–2013 அன்று இந்த இறுதி ஆணையை வெளியிட்டபோதிலும், அவ்வாணையை செவ்வனே செயல்படுத்த ஒரு நிரந்தர ஏற்பாடாக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை இன்னமும் ஏற்படுத்தவில்லை. எனவே, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை உடன் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும்; மேலும், கர்நாடகா மற்றும் கேரளா அரசுகள் எந்த ஒரு திட்டத்தையும் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் தமிழ்நாட்டின் இசைவினைப் பெறாமலும் மேற்கொள்ளக்கூடாது எனவும் மற்றும் கர்நாடகா, கேரளா அரசுகளின் எத்தகைய திட்டங்களுக்கும் மத்திய நீர் ஆதார அமைச்சகம் தொழில்நுட்ப ரீதியான அனுமதி வழங்கக்கூடாது எனவும்; மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

அத்தகைய திட்டங்களுக்கு தமிழ்நாட்டைக் கலந்தாலோசிக்காமல் அனுமதி வழங்கக்கூடாது எனவும் வலியுறுத்தும் பின்வரும் தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் முன்மொழிகிறேன். இதனை நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

## தீர்மானம்

*“காவேரி நடுவர் மன்றத்தின் 5–2–2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணை, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் பெரும் முயற்சியால் 19–2–2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட போதிலும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகள் இதுவரை அமைக்கப்படவில்லை. எனவே, காவேரியில் தமிழகத்திற்கு உரிய நீர் இந்த இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, மாதாந்திர வாரியாக பெறுவதற்கு ஏதுவாக, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்க வேண்டும் என்றும்; காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணைக்கு முரணான வகையில் கர்நாடக அரசு மேகதாதுவில் இரண்டு புதிய அணைகள் கட்ட முயற்சிப்பதையும், குடிநீர் வழங்கல் என்ற போர்வையில் காவேரி நீரவாரி நிகமம் வாயிலாக மேற்கொண்டுள்ள திட்டங்களையும், தடுத்து நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும்; காவேரி மேலாண்மை வாரியம் செயலாக்கத்திற்கு வரும் வரையிலும் மற்றும் தமிழ்நாட்டின் அனுமதியின்றியும் மேகதாதுவில் அணைகள் கட்டும் திட்டம் போன்ற எந்த ஒரு திட்டத்தையும் கர்நாடகம் செயல்படுத்த முனையக்கூடாது என்று கர்நாடக அரசுக்கு உரிய அறிவுரைகளை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும்; பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி என்னுமிடத்தில் புதிய அணை கட்டும் எந்தப் பணியையும் கேரள அரசு மேற்கொள்ளக் கூடாது எனவும்; காவேரி மேலாண்மை வாரியம் செயலாக்கத்திற்கு வரும் வரையிலும் மற்றும் தமிழ்நாட்டின் அனுமதியின்றியும் எந்த ஒரு திட்டத்தையும் கேரளா செயல்படுத்த முனையக்கூடாது என்றும், கேரள அரசுக்கு உரிய அறிவுரைகளை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும்; கர்நாடக, கேரள அரசுகளின் எத்தகைய திட்டங்களுக்கும் மத்திய நீர் ஆதார அமைச்சகம் தொழில்நுட்ப*

2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*ரீதியான அனுமதி வழங்கக்கூடாது என்றும்; மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம் அத்தகைய திட்டங்களுக்கு தமிழ்நாட்டைக் கலந்தாலோசிக்காமல் அனுமதி வழங்கக்கூடாது என்றும் மத்திய அரசை இந்த மாமன்றம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது." (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரத்தின் அருமை கருதி இனிமேல் பேசும் உறுப்பினர்கள் இரண்டு தீர்மானங்களின் மீதும் சேர்த்தே பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

*பிற்பகல் 3–55*

**திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு முன்மொழியப்பட்ட அரசினர் தனித் தீர்மானங்களை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக வழிமொழிகிறேன்.*

*இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் கடந்த 28–11–2011 அன்று மீன் பிடிக்கச் சென்றபோது, இராமேஸ்வரம் மீன் பிடித் தளத்திலிருந்து புறப்பட்டுச் சென்று, தங்களது பாரம்பரிய மீன் பிடிப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது, இலங்கைக் கடற்படை அவர்களைக் கைது செய்தது. இலங்கை அரசால் புனையப்பட்ட வழக்குகளிலிருந்து அவர்கள் விடுதலை பெறுவதற்காக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த ஐந்து மீனவர்களின் குடும்பத்திற்கும் மாதந்தோறும் உதவித் தொகையாக ரூ.7,500 வழங்கப்பட்டது.*

*30–10–2014 அன்று கொழும்பு உயர் நீதிமன்றம் இந்த ஐந்து அப்பாவி மீனவர்களுக்கும் மரண தண்டனை வழங்கியது. இலங்கை நீதிமன்றத்தில் அவர்களின் விடுதலைக்காக மேல்முறையீடு செய்திட உரிய நடவடிக்கைகள் எடுக்கவும், இராஜ்ஜிய நடவடிக்கைகள்மூலம் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க புரட்சித் தலைவி அம்மா அவர்களும், தமிழக அரசும் இந்தக் கோரிக்கையை மத்திய அரசுக்கு வைத்தனர். மத்திய அரசு மேற்கொண்ட இராஜ்ஜிய நடவடிக்கைகள் காரணமாக,*

[திரு. ஆ. நாராயணன்] [2014 டிசம்பர் 5

இந்த ஐந்து மீனவர்களும் 19–11–2014 அன்று விடுவிக்கப்பட்டு, 20–11–2014 அன்று தாயகம் திரும்பினார்கள். ஐந்து மீனவர்களின் வழக்கு செலவிற்காகவும், அவர்கள் சிறையில் இருந்தபோது அவர்கள் குடும்பத்தினரின் வாழ்வாதாரத்திற்காகவும், அந்த மீனவர்கள் இந்தியா திரும்பிய பின்னர் புதுவாழ்வு தொடங்குவதற்காகவும் மொத்தம் ரூ.63,85,000 ரூபாய் வழங்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்களை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி மனமார வரவேற்கின்றது.

அதுமட்டுமல்லாமல், இலங்கை சிறையில் வாடிக் கொண்டிருக்கும் 38 மீனவர்கள் உடன் விடுவிக்கப்படவேண்டும் என்றும், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் மத்திய அரசை இந்தச் சபை கேட்டுக்கொண்டிருக்கிறது. மேலும், 79 மீன் பிடிப் படகுகளை விடுவித்திட தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானம் இங்கே முன்மொழியப்பட்டிருக்கிறது. தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து சிறைப்பிடிக்கப்படுவதற்கு முக்கிய காரணம் கச்சத் தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது. தமிழக மீனவர்கள் எவ்வித இன்னலுமின்றி தங்களது வாழ்வாதாரத்தை மேற்கொள்ள ஏதுவாக கச்சத் தீவைத் திரும்பப் பெற வேண்டுமென்று இங்கே தீர்மானம் முன்மொழியப்பட்டிருக்கிறது. அதனை வரவேற்கின்றோம்.

அதேபோல, இனிவரும் காலங்களிலே எந்தவித இடையூறுமின்றி தமிழக மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்வதற்கு இம்மன்றத்தின்மூலம் வலியுறுத்துவதை நாங்கள் ஆதரிக்கின்றோம்.

தீர்மானம் இரண்டில், காவேரி நடுவர் மன்றம் 5–2–2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த பெருமுயற்சியால், 19–2–2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டபோதிலும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் ஒழுங்குமுறைப்படுத்தும் குழுவை உடனடியாக அமைக்க வேண்டும். காவேரியில் தமிழகத்திற்கு உரிய நீர் இந்த இறுதி ஆணையில் குறிப்பிட்டபடி, மாதாந்திர வாரியாகப் பெறுவதற்கு ஏதுவாக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் ஒழுங்குமுறைப்படுத்தும் குழு இதுவரை

2014 டிசம்பர் 5] [திரு. ஆ. நாராயணன்]

அமைக்கப்படவில்லை. அதை அமைக்க வேண்டுமென்றும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணைக்கு முரணானவகையில், கர்நாடக அரசு மேகதாதுவில் இரண்டு புதிய அணைகள் கட்ட முயற்சிப்பதையும், குடிநீர் வழங்கல் என்ற போர்வையில் காவேரி ஆற்றில் மேற்கொண்ட திட்டங்களைத் தடுத்து நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும், காவேரி மேலாண்மை வாரியம் செயலாக்கத்திற்கு வரும் வரையிலும் தமிழ்நாட்டின் அனுமதியின்றி மேகதாதுவில் அணைகள் கட்டும் திட்டம் போன்ற எந்த ஒரு திட்டத்தையும் கர்நாடகம் செயல்படுத்த முனையக்கூடாது என்று கர்நாடக அரசுக்கு உரிய அறிவுரைகளை மத்திய அரசு வழங்க வேண்டும்.

ஏற்கெனவே 192 டி.எம்.சி. அடி தண்ணீர் தர வேண்டிய சூழ்நிலையில், அதையே சரிவரத் தராத சூழ்நிலையில், மேலும் இரண்டு அணைகள் காவேரியில் கட்டி, அதன்மூலம் 48 டி.எம்.சி. அடி தண்ணீர் தேக்குவதற்கு கர்நாடக அரசு ஏற்பாடு செய்கின்றது என்பதை அறிகின்றோம். இந்தச் செயல் நமது விவசாயப் பெருமக்களைப் பாதிக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. எனவே, மத்திய அரசு இந்த முயற்சியைத் தடுக்க வேண்டுமென்று கூறி, இந்தத் தீர்மானத்தை வரவேற்று இந்த அரிய வாய்ப்பை வழங்கிய எங்கள் சமத்துவ மக்கள் கட்சியின் தலைவருக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நதி நீர் மேலாண்மை வாரியம், காவேரி நதி நீரைப் பெற முறையிடுகின்ற, பங்கிடுகின்ற அந்தக் குழு இரண்டையும் உடனடியாக மத்திய அரசு அமைத்திட வேண்டும். காவேரி நதிநீர்ப் பிரச்சினைக்கு விரைந்த தீர்வு காண வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டுள்ள அரசினர் தீர்மானத்தை நான் மகிழ்ச்சியோடு வரவேற்று வழிமொழியக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2014 டிசம்பர் 5 பிற்பகல் 4–00

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தனது உரையில் குறிப்பிட்டதைப்போன்று, சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகள், காவேரி நதியின் வெள்ளோட்டதைப் பார்த்து, வியந்து பாராட்டி, "நடந்தாய், வாழி காவேரி" என்று எழுதினார். இன்றைக்கு, இளங்கோவடிகள் இருந்திருந்தால், "காலுடைந்தாய், அய்யோ காவேரி" என்று கண்ணீர்விட்டு கதறியிருப்பார். அப்படிப்பட்ட நிலையில்தான் காவேரி இருக்கிறது. கர்நாடகம், தனது எல்லை மீறிய வகையில், தனக்கு இருக்கிற அதிகார வரம்புகளையெல்லாம் மீறி செயல்படுகின்ற வகையில் மேகதாது பகுதியில் அணை கட்டுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும், காவேரி வரத்து நதிநீர்ப் பகுதியின் சில இடங்களில் சில பகுதிகளில் அணை கட்டுவதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

அதேபோன்று, கேரள அரசு, பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி பகுதியில் அணை கட்டுகிறார்கள். இந்த முயற்சிகளையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டிய பெரும் கடமையும் பொறுப்பும் யாருக்கு இருக்கிறதென்றால், மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது.

காவேரி நதிநீர் தாவா என்பது 70 ஆண்டு காலத் தாவா. இந்த 70 ஆண்டு கால வழக்கில் தமிழகம் மிகக் கடுமையாக முயற்சித்திருக்கிறது. எப்படியெனில், எப்பொழுதெல்லாம் போற்றுதலுக்குரிய மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வருகிறார்களோ, அப்பொழுதெல்லாம் வழக்கு விரைந்து பயணப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு அது முடங்கிப்போகும். மீண்டும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வரும்போது, நெருங்கி வருகின்ற, வெற்றியை ஈட்டுகின்ற தருணம் அமையும். மீண்டும் அது முடங்கிப் போகிற நிலைமை வரும். ஆகவேதான், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோதும்கூட, அவர்கள் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் சார்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, தங்களுடைய கடுமையான போராட்ட உணர்வை வெளிப்படுத்தினார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள், காவேரி நதிநீர்ப் பிரச்சினைக்காக எழுதிய கடிதங்கள் இருக்கிறதே ஏராளம், ஏராளம்.

2014 டிசம்பர் 5] [முனைவர் செ.கு. தமிழரசன்]

அந்தக் கடிதங்கள், காவேரியின் நீண்ட வரலாற்றை கண்ணீர் வரலாறாக மாற்றுகின்ற வகையிலும், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவதற்காக அவர் எடுத்த முயற்சிகளுக்கு சாட்சிகளாகவும் அமைந்துள்ளன. தமிழ் மக்களுடைய இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு, நிலைநாட்டுவதற்கு, பாரம்பரியப் பெருமைகளை நிலைநாட்டுவதற்கு, வெல்வதற்கு, போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் தொடர் நடவடிக்கைகளாக அமைந்திருக்கின்றன. அந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்று அரசினர் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். இந்தத் தருணத்தில் பாலாறு பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். பாலாற்றின் படுகைகளில் ஆந்திர மாநிலம் தன்னிச்சையாக அணை கட்ட முயற்சித்திருக்கிறது. பாலாறு, பாழாறாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஆலமரங்கள் நிறைந்த ஆற்காடாகவும், வேல மரங்கள் நிறைந்த வேற்காடாகவும், தமிழகத்தின் நெற்களஞ்சியம் தஞ்சை என்றால், இரண்டாவது நெற்களஞ்சியம் வேலூர் மாவட்டம் என்பது மாறி, இன்றைக்கு வெயிலூராக, வறண்ட மாவட்டமாக மாறிக் கொண்டிருக்கிறது. எனவே, அதுகுறித்தும் அரசின் கவனத்தை ஈர்த்து, இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 4–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய ஆற்று நீர் உரிமையில் பெரும் வரலாற்றுச் சாதனையைப் படைத்து, கோடிக்கணக்கான தமிழ்நாட்டு விவசாயிகளுடைய நெஞ்சங்களிலெல்லாம் நிறைந்து இருக்கிற, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தினுடைய, உலகளாவிய தமிழ்ச் சமூகத்தினுடைய பேராதரவை, அன்பைப் பெற்று, மாசற்று, மக்களுக்காக அயராது தொண்டாற்றிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அயராத கடும் முயற்சியால் காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பின் இறுதி ஆணை 19–2–2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. ஆனாலும், இன்று வரை காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு அமைக்கவில்லை; அதற்கான நடவடிக்கையும் இல்லை. இனியும்

[திரு. உ. தனியரசு] [2014 டிசம்பர் 5

தாமதிக்காமல், மத்திய அரசு உடனடியாக காவேரி மேலாண்மை வாரியத்தை அமைத்திட வேண்டும் என்ற இன்றைய தீர்மானத்தையும், தமிழ்நாட்டின் அனுமதியில்லாமல் மேகதாது அணையைக் கட்டும் கர்நாடக அரசின் திட்டத்தைக் கைவிட கர்நாடக அரசுக்கு மத்திய அரசு உரிய அறிவுரைகளை வழங்கிட வேண்டும் எனவும், பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி என்னும் இடத்திலே புதிய அணையைக் கட்டி, கேரளா தொடர்ந்து நம்மை வஞ்சிக்கின்ற இந்த நிலை தொடரக்கூடாது என்பதற்காகவும், தமிழ்நாட்டின் அனுமதியின்றி இதுபோன்ற நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயல்படுத்தக்கூடாது என கேரளா அரசிற்கு மத்திய அரசு உரிய அறிவுரைகளை வழங்கிட வேண்டுமெனவும், கர்நாடக–கேரள அரசினுடைய இத்தகைய நீர்த்தடுப்புத் திட்டங்களுக்கு மத்திய நீர் ஆதார அமைச்சகம், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம், தமிழ்நாட்டைக் கலந்தாலோசிக்காமல், தமிழக அரசின் அனுமதியில்லாமல், இசைவில்லாமல் மத்திய அரசாங்கம் அனுமதி தரக்கூடாது என்கின்ற இந்தத் தீர்மானம் முன்மொழியப்பட்டுள்ளது. ஏற்கெனவே, காலமெல்லாம், ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் தமிழ்ச் சமூகம் அனுபவித்துவந்த நீராதார உரிமையை, இடையில் ஆட்சிக்கு வந்த ஒரு சிலரால் தமிழ்நாட்டு மக்களினுடைய நீராதார உரிமை பறிக்கப்பட்டிருந்த நிலையை மாற்றிட, கடைசியாக, இந்தியத் திருநாட்டின் உச்ச நீதிமன்றத்தினுடைய கதவையும் தட்டி, ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தினுடைய ஜீவாதார, வாழ்வாதாரப் பிரச்சினைக்காக அயராது, தொடர்ந்து போராடி, ஆற்றுநீர் உரிமையை, தமிழர்களுடைய வரலாற்றைப் பாதுகாத்த ஒப்பற்ற முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசினுடைய இந்தத் தீர்மானத்தை நான் மனமார, வரவேற்று, ஆதரித்து வழிமொழிகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பிற்கு முரணாக, கர்நாடக அரசு மேகதாது என்ற பகுதியில் புதிய அணையைக் கட்ட முயற்சிப்பதற்கும், அதேபோன்று கேரள மாநிலத்திலே பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி என்ற இடத்தில் புதிய அணையைக் கட்டும்

2014 டிசம்பர் 5] [திரு. பி.வி. கதிரவன்]

முயற்சியினை மேற்கொள்கின்ற நிகழ்வுகளில், இந்த நேரத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பது உண்மையிலேயே பாராட்டுதற்குரியது. ஏனென்றால், இந்தச் செய்தி அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றவுடன், டெல்டா பகுதிகளிலிருக்கின்ற விவசாயிகள் இங்கே அதற்கான ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்த அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கின்ற முறையில் செயல்படுவதைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். மாண்புமிகு மக்களின் முதல்வர், காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பு 5—2—2007—ல் வந்தாலும்கூட, அதன் இறுதி ஆணையை மத்திய அரசு அரசிதழில் வெளியிடுவதற்காகப் போராடி, கடந்த 19—2—2013—ல் பிரசுரிக்கச் செய்த பெருமை மாண்புமிகு மக்களின் முதல்வருக்கு உண்டு, அதைத் தொடர்ந்து செய்தும் வருகிறார்கள். அதைத் தொடர்ந்து மக்களின் முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், மாண்புமிகு தமிழக முதல்வர் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்திருப்பது பாராட்டுதற்குரியது. அதனால் மத்திய அரசு இதிலே தலையிட்டு, கர்நாடக—கேரள அரசுக்குத் தகுந்த அறிவுரைகளைக் கூறி, அது மட்டுமல்லாது, தமிழகத்தைப் பாதுகாக்கின்ற வகையில் செயல்பட வேண்டுமென்று கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை அகில இந்திய பார்வர்டு ப்ளாக் கட்சியின் சார்பாக வழிமொழிந்து வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதைப் பொருள் கடத்தியதாக புனையப்பட்ட வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்த மத்திய, மாநில அரசுகளுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கடல் எல்லையைக் கடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, இலங்கை சிறையில் வாடிக்கொண்டிருக்கின்ற 38 மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தியும், அதேபோல, ஏற்கெனவே இலங்கை அரசால் கைப்பற்றப்பட்டு, அவர்கள் வசம் இருக்கக்கூடிய 79 மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவித்திட வேண்டுமென வலியுறுத்தியும், நிரந்தரமாகத் தமிழக மீனவர்களுடைய

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2014 டிசம்பர் 5

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண கச்சத் தீவை மீட்டெடுப்பது ஒன்றே வழி என்ற அடிப்படையில் கச்சத் தீவை இலங்கையிலிருந்து மீட்டெடுக்க வேண்டுமென வலியுறுத்தியும் கொண்டுவரப்பட்டிருக்கும் அரசின் தீர்மானத்தைப் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில், கச்சத் தீவை மீட்டெடுக்கக்கூடிய விஷயத்தில், நாம் தொடர் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தையும் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதேபோன்று, ஏறக்குறைய 4, 5 வருடங்களுக்கு முன்பு காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பு கொடுத்த பின்பும்கூட, இன்னும் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்காததாலும், அதேபோல காவேரி நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்புகளுக்கு முரணாக கர்நாடக அரசு, கர்நாடகத்தில் மேகதாது என்ற இடத்தில் அணை கட்டுவதாலும் தமிழகத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு; அதேபோன்று உடுமலைப்பேட்டைக்கு அருகே இருக்கக்கூடிய பழையூர் என்ற இடத்தில் பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்டுவதால் அமராவதி அணைக்கு வரக்கூடிய 8 டி.எம்.சி. அடி தண்ணீரின் அளவு குறைந்து அந்தப் பகுதி விவசாயிகளுக்குப் பெரிய பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தினாலும், அந்த அணையைக் கட்டுவதற்கும் அனுமதி அளிக்கக்கூடாது என்று இந்த அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானங்களைப் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். பாம்பாற்றின் குறுக்கேயும், மேகதாது என்ற இடத்திலும் அணை கட்டுவதற்கு அந்த இரண்டு மாநில அரசுகளுக்கும் மத்திய அரசு எந்தவிதத்திலும் அனுமதி அளித்துவிடக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தி அமர்கிறேன்.

பிற்பகல் 4—10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தொகுதி, தங்கச்சிமடத்தைச் சேர்ந்த எமர்சன், வில்சன், அகஸ்டஸ், பிரசாத் மற்றும் லேங்க்லெட் என்ற 5 மீனவர்கள், புனையப்பட்ட வழக்கிலே தூக்குமேடை ஏறக்கூடிய ஒரு பயங்கரமான தீர்ப்பை சிங்கள இனவாத இலங்கை அரசு விதித்தது. அதைத் தொடர்ந்து இன்று மாண்புமிகு

2014 டிசம்பர் 5] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லாஹ்]

முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற தனித் தீர்மானத்திலே, தமிழக அரசு இந்த 5 மீனவர்களை மீட்பதற்காக கடந்த காலங்களிலே என்னென்ன நடவடிக்கைகளைச் சட்ட ரீதியாக எடுத்திருக்கின்றது அந்தக் குடும்பங்களுக்கு எப்படியெல்லாம் உதவியிருக்கின்றது என்பதைப் பற்றி விரிவாகச் சொன்னார்கள்.

தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்து அரசியல் கட்சிகளும், பல்வேறு இயக்கங்களும் இதற்காகக் குரல் கொடுத்ததைப் பற்றியும் தன்னுடைய தீர்மானத்திலே பதிவு செய்திருக்கின்றார்கள். மத்திய அரசு எடுத்த இராஜ்ஜிய நடவடிக்கைகளைப் பற்றியும் அவர்கள் பதிவு செய்திருக்கின்றார்கள். இது ஒரு நியாயமான தீர்மானம். தமிழக அரசும், தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை பேரும் ஒருமித்த கருத்தை வலியுறுத்தி இந்த விடுதலையைப் பெற்றிருக்கின்றோம்; மத்திய அரசையும் பாராட்டியிருக்கின்றோம். ஆனால், இங்கே ஒன்றைத் தெளிவாகப் பதிவு செய்ய விரும்புகின்றேன். வழக்கமாக இலங்கையினால் கைது செய்யப்படக்கூடிய மீனவர்கள் விடுவிக்கப்படும்போது, அவர்கள் மண்டபத்தில் இருக்கக்கூடிய படகுத் துறைக்குக் கொண்டுவரப்படுவார்கள் அல்லது நாகப்பட்டினத்திற்கு வந்திருக்கின்றார்கள். சில முறை தூத்துக்குடிக்கு வந்திருக்கின்றார்கள். சில முறை காரைக்காலுக்குக்கூட வந்திருக்கின்றார்கள். ஆனால், கொழும்பிலிருந்து தங்கச்சிமடத்திற்கு சுருக்கமான வழி கொழும்பு–டெல்லி, டெல்லி–சென்னை, சென்னை–இராமநாதபுரம் என்ற அந்த நிலையை ஏன் மத்திய அரசினர் எடுத்தார்கள் என்றால்— நான் மிகத் தெளிவாகக் குற்றம் சாட்டுகின்றேன். நாங்கள் மட்டும்தான் இதைச் சாதித்தோம் என்பதைக் காட்டும்விதமாக, தமிழக மக்களை ஏமாற்றுவதற்காக இப்படிப்பட்ட ஒரு நாடகத்தை அவர்கள் நடத்தியிருக்கிறார்கள்.

திருச்சியிலே அவர்கள் வந்து இறங்குவார்கள் என்று அறிவித்து, நான் திருச்சி விமான நிலையத்தில் அந்த மீனவக் குடும்பத்தினருடன் இருந்தபோது 8–40 மணி விமானத்தில் அவர்கள் வருவதாக அறிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 12–30 மணி விமானத்தில் வருவதாக அறிவிக்கப்படுகிறது. நான் அந்தக் குடும்பத்தினரோடு இருக்கும்பொழுது டெல்லியிலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வருகிறது. தொலைபேசியின்

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2014 டிசம்பர் 5

மறுமுனையிலே பேசியவர் டெல்லியில் இருக்கக்கூடிய ஒரு உயரதிகாரி என்று அந்தக் குடும்பத்தினர் சொன்னார்கள். தமிழக அதிகாரிகள் சொன்னதைக் கேட்டு, உங்களை யார் திருச்சிக்கு வரச் சொன்னார்கள்? இவர்கள் எல்லாம் டெல்லிக்கு வரப்போகிறார்கள் என்று அவர்கள் சொன்னதை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

உண்மையிலேயே இது தமிழக அரசாங்கம் எடுத்த முன்முயற்சியின் காரணமாக, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள் ஒட்டுமொத்தமாகக் காட்டிய எதிர்ப்புகளின் காரணமாக விளைந்தது 5 மீனவர்களுக்குத் தூக்கு தண்டனை வழங்கப்பட்ட 29 ஆம் தேதியன்று இராமேஸ்வரம் தீவிலே மீனவ மக்கள் ஒருமித்து நடத்திய போராட்டம், அந்த மீனவ மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு தமிழக அரசு நடவடிக்கை எடுத்தது. இது பற்றி நான் ஏற்கெனவே சட்டமன்றத்திலே பேசியிருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். இது தொடர்பாக தமிழக அரசு பல முறை மத்திய அரசுக்குக் கடிதமும் எழுதியிருக்கின்றது. ஆனால், இப்படிப்பட்ட தமிழக மக்களுடைய போராட்ட குணத்தின் காரணமாகத்தான் இந்த விடுதலை சாத்தியமாகியது.

பிற்பகல் 4–15

இந்தத் தீர்மானம் தொடர்பாக இன்னொன்றையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். 79 படகுகள் இலங்கை வசம் இருக்கின்றன; அதேபோன்று, 38 மீனவர்கள் இன்னும் இலங்கையின் வசம் இருக்கிறார்கள் என்றும், அவர்களை விடுவிப்பதற்கு மத்திய அரசு முயற்சி செய்ய வேண்டுமென்றும் இந்தத் தீர்மானம் வலியுறுத்துகிறது. இந்தப் படகுகளைப் பொறுத்தவரையில், எப்பொழுதெல்லாம் மத்தியிலே பா.ஜ.க. தலைமையில் மத்திய அரசு இருந்திருக்கின்றதோ, அப்பொழுதெல்லாம் தமிழக மீனவர்களுடைய படகு ஒன்றுகூட மீட்கப்படவில்லை. சென்ற முறை திரு. வாஜ்பாய் அவர்கள் தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு இருந்தபோது, தமிழக மீனவர்களுடைய நூற்றுக்கும் மேற்பட்ட படகுகள் இலங்கையினால் அரசுடைமையாக்கப்பட்டு, இறுதிவரையில் அந்தப் படகுகள் மீட்கப்படவில்லை. அதற்குப் பிறகு சுனாமி

2014 டிசம்பர் 5] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

நிதியிலிருந்து அவர்களுக்கு இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, நிவாரணத் தொகை வழங்கப்பட்டது என்பதையும் நான் இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, பா.ஜ.க. ஆட்சி வந்ததற்குப் பிறகு, ஒருவர் சொல்கின்றார்; அவர் மத்தியிலே ஆட்சி செய்யக்கூடிய பா.ஜ.க. அரசாங்கத்தினுடைய மிகப் பெரிய சித்தாந்தக் குழுவினுடைய தலைவராம். அவர் சொல்கின்றார்; தமிழக மீனவர்களுடைய படகுகளெல்லாம் மிகப் பெரிய கோடீஸ்வரர்களுடைய படகுகள்; ஒன்றும் மீட்கப்படாது என்று அவர் சொல்லக்கூடிய அளவிற்கு, மத்திய அரசாங்கத்தினுடைய சிந்தனையை அது வெளிப்படுத்துகிறது.

அதே நேரத்தில், திரு. மோடி அவர்களுடைய ஆட்சி டெல்லியிலே ஏற்பட்டபொழுது, பகை நாடு என்று அழைக்கப்படக்கூடிய பாகிஸ்தான்வசம் 151 மீனவர்கள் இருந்தார்கள்; 57 படகுகள் இருந்தன. திரு. மோடி அவர்கள் பிரதமராகப் பதவியேற்கும்பொழுது, நவாஸ் ஷெரீப் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார். 'எங்கள் வசம் இருக்கக்கூடிய இந்திய மீனவர்களையும், படகுகளையும் விடுவிப்பேன்' என்று அவர் சொன்னார். அந்த மீனவர்கள் 151 பேர்களும் விடுவிக்கப்பட்டார்கள்; 57 படகுகளும் 22 ஜூலை 2014 அன்று விடுவிக்கப்பட்டன. திரு. மோடி அவர்கள் இந்தியாவினுடைய பிரதமராகப் பொறுப்பேற்றபோது, இலங்கைவசம் தங்கச்சிமடத்தைச் சார்ந்த ஐந்து மீனவர்கள் மட்டும்தான் இருந்தார்கள்; படகுகள் அப்போது எதுவுமேயில்லை. இந்த ஐந்து மீனவர்களும் தூக்கு தண்டனை பெற்று, விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஆனால், திரு. நரேந்திர மோடி அவர்களுடைய தலைமையிலே பா.ஜ.க. ஆட்சி வந்த பிறகு கைப்பற்றப்பட்ட ஒரு படகைக்கூட இதுவரை மீட்க முடியாத, செயல்திறன் மிகுந்த அரசு மத்தியிலே இருக்கின்றது என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். எனவே, இந்தத் தீர்மானத்தை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மனமார வரவேற்கிறேன்.

அதேபோல, மேகதாது என்ற இடத்தில் கர்நாடக அரசு அணை கட்டும் முயற்சியில் ஈடுபடுவதைத் தடுத்து நிறுத்தக் கோரியும், பாம்பாற்றிலே அணை கட்டக்கூடிய கேரள அரசுக்குத் தகுந்த அறிவுறுத்தலை வழங்குவதோடு, இத்திட்டங்களுக்கு தமிழ்நாட்டைக்

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2014 டிசம்பர் 5

கலந்தாலோசிக்காமல் மத்திய அரசு எந்தவித அனுமதியும் வழங்கக்கூடாது என்று வலியுறுத்தியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானத்தை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்று, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்களின் உரிமைகளையும், உடைமைகளையும் பாதுகாக்க தமிழக அரசு எடுத்துவரும் அனைத்து நடவடிக்கைகளையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன். தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது என்பது தொடர் நிகழ்வாகவே பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இந்தச் சூழ்நிலையில் ஐந்து தமிழக மீனவர்கள்மீது இலங்கை அரசால் கஞ்சா கடத்தியதாகப் பொய் வழக்கு புனையப்பட்டு, அந்த வழக்கில் அவர்களுக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டதாகத் தீர்ப்பு வெளிவந்த சூழ்நிலையில், ஒட்டுமொத்த தமிழக மக்களும், அனைத்துத் தமிழக அரசியல் கட்சிகளும் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்களின் உயிரைக் காத்ததற்கும், அவர்களை விடுதலை செய்வதற்கும் மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன்.

அதேசமயத்தில், இன்னும் மீட்கப்படாத நிலையில் கிட்டத்தட்ட 79 படகுகள் உள்ளன; 38 மீனவர்கள் உள்ளனர். இதன் காரணமாக அவர்களைச் சார்ந்து தொழில் நடத்திக் கொண்டிருக்கக்கூடிய ஆயிரத்திற்கும் மேற்பட்டோர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், அந்தப் படகுகளை மீட்பதற்கு அனைத்து இராஜாங்க ரீதியிலான நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்வதற்கு வழிவகை செய்யும் இந்தத் தீர்மானத்தை பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது.

அதேசமயம், இன்றைக்குத் தமிழகத்தின் உரிமையான, ஜீவாதார நதியான காவேரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் கர்நாடக அரசு இரண்டு தடுப்பணைகளைக் கட்ட மேற்கொள்ளவிருக்கும் முயற்சியைத் தடுத்து நிறுத்தவும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு

2014 டிசம்பர் 5] [திரு. அ. கணேஷ்குமார்]

அமைக்கப்படாத சூழ்நிலையில், அவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், கர்நாடக அரசின் இந்தச் செயல் இறுதிக் கட்டத் தீர்ப்புக்கு எதிரான செயலாகும்; காவேரி ஆற்றின் குறுக்கே எந்தவிதமான திட்டத்தைத் தொடங்க வேண்டுமானாலும், திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமானாலும், கடைமடைப் பகுதியாக உள்ள கடைமடை மாநிலங்களின் ஒப்புதல் இல்லாமல் அந்தத் திட்டங்களை நிறைவேற்றக் கூடாது என்ற விதி இருந்தபொழுதும், அண்டை மாநிலங்களான கர்நாடக மாநிலமாக இருந்தாலும் சரி, கேரள மாநிலமாக இருந்தாலும் சரி, தமிழகத்தை ஜீவாதார பிரச்சினையில் தள்ளுவதற்கும், டெல்டா மாவட்டங்களை பாலைவனமாக மாற்றும் சூழ்நிலையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்தத் தருணத்தில், அதைத் தடுத்து நிறுத்துவதற்கு தமிழக அரசு இன்றைக்குக் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை வரவேற்கும் அதே சமயத்தில், மாநில உரிமைகள் எதுவாக இருந்தாலும் அந்த மாநில உரிமைகளை மீட்டெடுப்பதற்காக இதுவரை தமிழக அரசு கிட்டத்தட்ட 150–க்கும் மேற்பட்ட கடிதங்களின் மூலமாக மத்திய அரசை வலியுறுத்தியிருக்கக்கூடிய சூழ்நிலையில், தமிழகத்தின்மீது மத்திய அரசு இன்னும் பாராமுகமாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பதையும் இந்த அவையின்மூலமாக ஓர் எதிர்ப்பைப் பதிவு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் பதிவு செய்கிறேன்.

பிற்பகல் 4–20

அதுமட்டுமல்லாமல், மேலும் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த மாநில உரிமைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் ஒருமித்த குரலில்தான் இருக்கிறோம் என்பதை பிரதமருக்கும், மத்திய அரசுக்கும் எடுத்துரைக்கின்றவகையில் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி, அனைத்துக் கட்சித் தலைவர்களின் குழுவை அமைத்து, நேரடியாக பிரதமரிடம் கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொண்டு, இந்த இரண்டு தீர்மானங்களையும் வரவேற்று அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

[2014 டிசம்பர் 5

**திரு. ம. கலை அரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்த இரண்டு தீர்மானங்களையும் வழிமொழிந்து வரவேற்கின்றேன், வாழ்த்துகின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனைத் திறத்தால், சிறந்த நுண்ணறிவால், தொலைநோக்குப் பார்வையால், தனக்கே உரிய அரசியல் சாதுரியத்தைப் பயன்படுத்தி, 5 அப்பாவி மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை இரத்து செய்தது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க செய்தியாகும் என்பதைப் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அதேபோல, கடந்த 30, 35 ஆண்டு கால அரசியல் வரலாற்றைக் கூர்ந்து கவனிக்கின்ற அரசியல் நோக்கர்களுக்கு நன்றாகத் தெரியும்; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாடாளுமன்றத்தில் 2–5–1984–ல்* 'The linking of the Ganga and Cauvery will prove beneficial to the whole country in several ways' *என்று தனக்கே உரிய பாணியில் ஆணித்தரமாகக் கூறினார்கள். தேசிய நதிகளையெல்லாம் இணைக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்தியாவிலே இருக்கக்கூடிய தண்ணீர்ப் பிரச்சினை தீரும், நமக்குள் ஒரு சகோதரத்துவம் உருவாகும் என்று, இன்றல்ல, நேற்றல்ல; ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு முன்னரே நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணித்தரமாக எடுத்துரைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அம்மா அவர்கள் 17–7–1993 முதல் 21–7–1993 வரையில் 5 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். உண்ணாவிரதம் என்றால் அதுதான் உண்ணாவிரதம். ஏதோ ஒப்புக்கு இருக்கின்ற உண்ணாவிரதம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) பச்சைத் தண்ணீர்கூட குடிக்காமல், பல தலைவர்கள் வற்புறுத்தியும் கேட்காமல், முழுமையாக உண்ணாவிரதம் இருந்து, காவேரி நதி நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உண்ணாவிரதம் இருந்த ஒரே தலைவி, உத்தமத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.*

*அம்மா அவர்கள் பொதுவாக சாதாரண, சாமானிய, ஏழை மக்களுக்காகப் பாடுபடுபவர்கள். பிறந்த குழந்தை முதல் வயது*

2014 டிசம்பர் 5] [திரு. ம. கலை அரசு]

முதிர்ந்தவர்கள் வரை உள்ளவர்களுக்காகப் பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகத் தீட்டி, இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றிருக்கக்கூடிய ஒரே தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

காவேரிப் பிரச்சினைக்காக பல்வேறு நிலைகளில், அதாவது, பாரதப் பிரதமரிடத்திலே முறையிடுதல், நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துச் சென்று பிரதமரைச் சந்தித்தல், நீர் வளத் துறை அமைச்சரைச் சந்தித்து, பல்வேறு நிலைகளில் தனக்கே உரிய பாணியில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பல வழிகளில் முனைந்திருக்கிறார்கள். அந்த வகையில் கடைசியாக காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடுவதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளை இந்த நாடே நன்கு அறியும். நாட்டு மக்களும் அறிவார்கள். அதற்காக பல்வேறு பாராட்டுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். விவசாயிகளுடைய உற்ற தோழனாக விளங்குபவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதற்குக் குந்தகம் ஏற்படுகின்ற வகையில், அவருடைய முயற்சியை வீணடிக்க வேண்டும் என்று விரும்புகின்ற சிலர் கர்நாடகாவில் அணை கட்டுகின்ற அந்த முயற்சியை அம்மா அவர்கள் முறியடிப்பார்கள், அவருடைய முயற்சி வெற்றி பெறும் என்பதைச் சொல்லி, இந்தத் தீர்மானத்தை முழுமையாக வரவேற்கின்றேன், வணக்கம்.

பிற்பகல் 4—25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்கள் தவறுதலாக எல்லை தாண்டுகிறார்கள் என்பது ஏதோ ஒரு தீவிரவாத செயல் போல எண்ணி கைது செய்யப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். இதற்கு நிரந்தரத் தீர்வு காண ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட வேண்டும். அவர்களுடைய படகுகள் இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டு, தற்போது விடுவிக்கப்படாமல் உள்ளன. மத்தியில் காங்கிரஸ் ஆட்சி புரிந்த காலத்தில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களையும், அவர்களுடைய படகுகளையும் விடுவிக்க இராஜ்ஜிய ரீதியிலான நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும், தமிழக அரசின் முயற்சியையும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளின்

[திருமதி. எஸ். விஜயதரணி] [2014 டிசம்பர் 5

குரலையும் கேட்டுதான் மத்திய அரசு அந்த இராஜ்ஜிய ரீதியிலான நடவடிக்கைகளை எடுத்து, மீட்டு வந்தது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், தற்போது பிடிபட்ட மீனவர்களின் விடுதலையும், மீன்பிடிப் படகுகளையும் விடுவிப்பது என்பது கேள்விக் குறியாக உள்ளது.

மத்தியில் தற்போது ஆட்சியில் உள்ள கட்சியின் ஒரு நபர் கட்டளையிட்டால்தான் இலங்கை அரசு படகுகளை விடுவிக்கும் என்பது போன்ற ஒரு பிம்பம் உருவாக்கப்படுகிறது. எனவே, அனைத்துக் கட்சிகளின் குரலாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இம்மாமன்றத்தின் தீர்மானத்தின்மூலம் மத்திய அரசை வலியுறுத்தி, 38 மீனவர்களை விடுவிக்கவும். 79 மீன்பிடிப் படகுகளை விடுவிக்கவும் கொண்டு வந்த தீர்மானத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், தமிழக சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும் ஆதரிக்கிறேன். தமிழக மீனவர்கள் விடுதலை என்பது மத்தியில் ஆளும் தற்போதுள்ள அரசாங்கம்தான் சாதித்திருப்பது போன்று ஓர் உருவகத்தை உருவாக்கி வருகிறார்கள். அது தமிழ்நாட்டிலிருந்து யாரும் கோரிக்கை வைக்காமலேயே எந்த முயற்சியும் எடுக்காமலேயே இங்கிருந்து நிதிகள் பலவும் வழங்கப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் அங்கீகாரப்படுத்தாமல், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா சொன்னதுபோல் அவர்களை வேக, வேகமாக பிளைட்டில் கொண்டு சென்று டெல்லியில் அங்கு அமைச்சர்களுடன் பேசுவதுபோல் பத்திரிகைகளில் பெரிய போட்டோக்களைப் போட்டு, இந்தியா முழுவதும் தமிழக மீனவர்களின் காவலர்களைப்போல ஒரு பிம்பத்தை உருவாக்கி வருகிறது மத்தியில் இருக்கக்கூடிய தற்பொழுதுள்ள அரசாங்கம். காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் இதுபோன்ற ஒரு செயல்கூட நாங்கள் செய்தது இல்லை. நாங்கள் இதுபோல, தமிழக மீனவர்களையும் இராஜ்ஜிய ரீதியாக மத்திய அரசின் தலையீடு இல்லாமல் மீட்கப்பட முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். அதனால்தான் இன்றைக்கு நீங்கள் எல்லாம் மத்திய அரசுக்கு நன்றி கூறியிருக்கிறீர்கள். அதேபோல், இராஜ்ஜிய ரீதியாக எடுத்த நடவடிக்கைகள் காரணமாக தமிழக மீனவர்களை, படகுகளை மீட்டது காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் அதே நடைமுறையில்தான், அதில் மாற்றம் இருக்க வாய்ப்பில்லை. ஆனால், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசாங்கத்தையும், தமிழ்நாடு சட்டமன்றத்தையும், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய

2014 டிசம்பர் 5] [திருமதி. எஸ். விஜயதரணி]

அனைத்துக் கட்சிகளின் குரலையும் காங்கிரஸ் கட்சி மதித்தது என்பதை நீங்கள் இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இருந்தாலும், நீங்கள் இன்றைக்கு மத்திய அரசுக்கு நன்றி எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன், அதில் தவறில்லை. இருந்தாலும்கூட காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நாங்கள் எவ்வாறு தமிழ்நாட்டிற்கும், தமிழக அரசிற்கும் ஒரு மரியாதை அளித்தோம் என்பதைப் பார்க்க வேண்டும். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய அரசாங்கம் எந்த மாதிரி நடந்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசாங்கம் செயல்படவில்லை என்பது போன்ற ஒரு பிம்பத்தை உருவாக்குவது தவறு. ஒரு தனி நபர் இருந்துகொண்டு, நான் சொன்னால்தான் படகுகளை விடுவிப்பார் ராஜபக்சே என்றெல்லாம் கூறிக்கொண்டிருக்கிறார். அது ஒரு தவறான கூற்று. அதை நாம் கண்டிக்க வேண்டும். இந்த ஒட்டுமொத்த தீர்மானம் என்பது ஒரு தீர்வாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இதுபோன்ற ஒரு தனி நபர் வந்து படகுகளை மீட்பது என்பது சாத்தியமில்லை. ஆகையால், அதுபோன்ற பிம்பங்களை உருவாக்கும் முயற்ச்சிக்கு தமிழ்நாடு சட்டமன்றம் கொண்டு வந்த இந்தத் தீர்மானம் ஒரு சரியான பதிலடியாக இருக்கும் என்பது எனது தாழ்மையான கருத்து. எனவே, இந்தத் தீர்மானத்தை முழு மனதுடன் எங்கள் கட்சியின் சார்பாக ஆதரிப்பதுடன், காவேரி நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையிலும், உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையிலும் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை கர்நாடகம், கேரளம் அணைகள் கட்டும் முயற்சியைத் தடுத்து நிறுத்த முடியும். எனவே, வழங்கப்பட்ட அனைத்துத் தீர்ப்புகளையும் பரிசீலிக்கும்போது எந்தவொரு கட்டமைப்புகளோ, எந்த மாற்றங்களோ சர்ச்சைக்குரிய பகுதிகளில் யாராலும் உருவாக்கப்பட வேண்டுமானால், உரிய ஒப்புதல்கள் இல்லாமல் மேற்கொள்ள முடியாது என்ற சட்ட ரீதியிலான அணுகுமுறைகளைப் பின்பற்றி, மத்திய அரசை வலியுறுத்துவதுடன் தேசிய நீர் மின் திட்டக் கழகம்மூலம் திட்டங்களை விரைந்து நிறைவேற்றவும், அண்டை மாநிலங்களுடன் நல்லுறவை வலுப்படுத்த பேச்சுவார்த்தையின்மூலமும் உரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து தமிழக அரசு மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையையும் முன்வைத்தும் இந்தத்

[திருமதி. எஸ். விஜயதரணி] [2014 டிசம்பர் 5

தீர்மானத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற காங்கிரஸ் கட்சி சார்பாகவும் ஆதரித்து, அமைகிறேன்.

*பிற்பகல் 4–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வரின் சார்பில் கொண்டு வந்திருக்கிற இரண்டு தீர்மானங்களை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். முழுமையாக ஆதரிக்கிறோம். முதலாவது தீர்மானமாக நமது தமிழக மீனவர்கள் அடிக்கடி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதும், வழக்குகள் பதிவு செய்யப்படுவதும், அவர்களுடைய படகுகளை இலங்கையிலே வைத்துக் கொண்டு திரும்பக் கொடுக்காமல் இருப்பதும் என்ற அடிப்படையில் தொடர் நடவடிக்கைகள் வந்து கொண்டிருக்கிற நிலையில், 28–11–2011 ஆம் தேதி 5 மீனவர்களை போதைப் பொருள் கடத்தினார்கள் என்ற அடிப்படையில் அவர்களைக் கைது செய்து, அவர்கள்மீது 3 ஆண்டுகள் வழக்கு நடத்தி, அவர்களுக்கு மரண தண்டனையை விதித்தார்கள். கைது செய்யப்பட்ட நாளிலிருந்து அந்த வழக்கை நடத்துவதோடு மட்டுமல்லாமல், மீனவர்களின் குடும்பங்களை வாழ வைப்பதற்காக அவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்காக, தாயுள்ளத்தோடு நமது தமிழக அரசு 7,500 ரூபாயை ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கி மொத்த வழக்குகளை நடத்துவதற்குமாகச் சேர்த்து 63 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் கொடுத்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பாராட்டுகிறேன்.

'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதுஆம் நட்பு.'

அதைப்போல, கஷ்டம் வரக்கூடிய நேரத்தில் தாயுள்ளத்தோடு 5 குடும்பங்களையும் பாதுகாத்த தமிழக அரசுக்கு நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும், மரண தண்டனை அறிவிக்கப்பட்டவுடன் இராமேஸ்வரம் பகுதியில் இருக்கக்கூடிய மீனவர்கள் கட்சி, ஜாதி, மதம் என்ற உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு, சுனாமி எழுந்ததைப்போல ஒன்றுபட்டு ஒரு மகத்தான போராட்டத்தை நடத்திக் காட்டினார்கள். இரயில்கள் எல்லாம்

2014 டிசம்பர் 5] [திரு. சு. குணசேகரன்]

நிறுத்தப்பட்டன. அங்கு எந்தவிதமான போக்குவரத்தும் இல்லாமல், சுனாமி வந்தால் எப்படி ஒரு பகுதியே ஸ்தம்பிக்குமோ, அதைப்போல அந்த மக்கள் ஓர் எழுச்சிகரமான ஒன்றுபட்ட உணர்வுபூர்வமாக நடத்திய போராட்டம் என்பது மத்திய அரசாங்கத்தையே ஆட்டியிருக்கிறது என்பதால்தான் மத்திய அரசு இந்த நடவடிக்கையில் தன்னுடைய கவனத்தைச் செலுத்தியதற்கான முதல் படியாக நான் கருதுகிறேன். அந்த அடிப்படையில் இந்தத் தீர்மானத்தில் அனைத்து வகையான போராட்டங்களையும் உள்ளடக்கி இந்தத் தீர்மானம் வந்திருப்பதையும் நான் வரவேற்கிறேன். எனக்கு முன்னால் இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் கூறியதுபோல, மத்திய அரசுக்கு நாம் நன்றி தெரிவிப்பது என்பது தமிழர்களுடைய நாகரிகத்தையும், பண்பாட்டையும் காட்டுகிறது. ஆனால், மத்திய அரசு தமிழக மீனவர்கள் இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் சிக்குகிறபோது அவர்களைக் காப்பாற்ற வேண்டிய அரசியல் கடமை இருக்கிறது. அதைச் செய்வதாக நாம் எடுத்துக்கொண்டாலும் இன்றைக்கு மத்தியிலே இருக்கக்கூடிய பாரதிய ஜனதா கட்சி ஓர் உள்நோக்கத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகுகிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். குறிப்பாக, அவர் சுட்டிக்காட்டியதுபோல, விடுதலை செய்யப்பட்டதற்குப் பின்னால் அவர்கள் நடத்திய நாடகம், இன்னும் சொல்லப்போனால் தமிழக அரசுக்கு, தமிழக அமைச்சர்களுக்குக்கூட தெரியாமல் அவர்களை இராமேஸ்வரத்திற்குக் கொண்டு செல்வதற்காக அவர்கள் எடுத்த நடவடிக்கை என்பது உண்மையிலேயே இந்திய அரசியல் ஜனநாயகத்தில் மத்திய, மாநில உறவுகளையே கேலிக்கூத்தாக மாற்றுகிற ஒரு சூழலை உருவாக்கியது. விடுவிக்கப்பட்டவர்களை டெல்லிக்கு அழைத்துச் சென்றால்கூட, அழைத்துச் சென்றதற்குப் பின்னால் எப்போது வருகிறார்கள், எங்கு வருகிறார்கள் என்று முறையாக தமிழக அரசுக்குத் தெரிவித்து, ஒரு நாகரிகமான அரசியலை நடத்தியிருக்கலாம்.

*பிற்பகல் 4—35*

ஆனால், ஏதோ 5 மீனவர்களை அவர்களாக விடுவித்ததைப்போல ஒரு தோற்றத்தை உருவாக்கி, அதன் மூலமாக தமிழகத்திலே வேரூன்றுவதற்காக அவர்கள் நடத்துகின்ற அரசியல் நாடகம்தான் இது என்பதை தமிழ்நாட்டு மக்கள்

[திரு. சு. குணசேகரன்] [2014 டிசம்பர் 5

புரிந்திருக்கிறார்கள். இதிலே மோடி அரசு மட்டுமல்ல, சுப்பிரமணிய சுவாமி என்கிற ஒரு சகுனி, அந்த ஆட்சிக்கு வினையாக இருந்து இன்றைக்கு ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறார். அவர் தமிழக மீனவர்களின் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி முதலிலே சொல்லும்போதுகூட ராஜபக்சேவினுடைய நண்பர்—எனவே, ராஜபக்சேவிடம் சொல்லிவிட்டேன்; மீனவர்களைக் கைது செய்ய வேண்டும். கடும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்; படகுகளை விடுவிக்கக் கூடாது என்று சொல்லிவிட்டேன் என்று பகிரங்கமாகவே அறிவித்தார். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு 79 படகுகள் விடுவிக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, சுப்பிரமணிய சுவாமி சகுனியாக வகுத்திருக்கிற இந்த வியூகத்தில், நேர்மையாக இருக்கக்கூடிய தமிழ்நாட்டு மக்கள் அதற்கு இடம் கொடுக்காமல் அந்த ஆட்சி, அதனுடைய சூழ்ச்சி வலையிலேயே வீழும் என்பதற்கு அடையாளம்தான் சுப்பிரமணிய சுவாமியினுடைய இந்த நாடகம். எனவே, அந்த அடிப்படையில் இன்றைக்கு மீனவர்களுடைய பிரச்சினையைப் பொறுத்த அளவிலே, 2003 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் திரு. வாஜ்பாய் பிரதமராக இருந்த நேரத்தில், இலங்கையிலே ரணில் விக்கிரமசிங்கே பிரதமராக இருந்தார். இந்த இரண்டு பேருக்கும் இடையிலே ஏற்பட்ட ஒப்பந்தம்தான் தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வந்தால் அல்லது இலங்கையின் மீனவர்கள் எல்லை தாண்டி வந்தால், அவர்களைக் கைது செய்து அந்தந்த நாட்டு கிரிமினல் சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தை அமல் செய்தார்கள். 2003–க்கு முன்னால் வரை தமிழக மீனவர்கள் எல்லை தாண்டினார்கள் என்று கைது செய்யப்பட்டாலும், உடனடியாக விடுவிக்கப்பட்டார்கள். அங்கே ஒரு F.I.R. போடப்படும், விடுவிக்கப்பட்டு விடுவார்கள். ஆனால் கைது செய்வது, சிறையில் அடைப்பது போன்ற நடவடிக்கைகள் என்பது பாரதிய ஜனதா கட்சியின் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில், ரணில் விக்கிரமசிங்கே இலங்கைப் பிரதமராக இருந்த நேரத்தில், இரு நாடுகளுக்கும் இடையில் போடப்பட்ட அந்த ஒப்பந்தம்தான் இன்றைக்கும் கிரிமினல் வழக்கின் அடிப்படையில் அங்கே நமது மீனவர்கள்மீது அந்த நாட்டு சட்டத்தின்படி F.I.R. போடப்பட்டு, சிறையில் அடைப்பதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. எனவே, தமிழக அரசு அந்த ஒப்பந்தத்தை இரத்து செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

2014 டிசம்பர் 5] [திரு. சு. குணசேகரன்]

அதேபோல, தனுஷ்கோடியினுடைய கீழைப் பகுதியிலிருந்து நாகப்பட்டினம், கோடியக்கரை வரை இருக்கக்கூடிய மன்னார், பாக் ஜலசந்தி பகுதியை மீன் பிடிக்கக்கூடிய மண்டலமாக உடனடியாக அறிவிக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் இராமேஸ்வரம் மீனவர்கள் மட்டுமல்ல, பொதுவாக இரு நாட்டு மீனவர்களும் அவர்களுடைய பாரம்பரிய வழக்கப்படி மீன் பிடிக்கிற உரிமையை நிலைநாட்டுவதற்கான வாய்ப்பாக அமையும். அந்த அடிப்படையில் பாக் ஜலசந்தி பகுதியில் எல்லையை வகுப்பது என்பது மிகப் பெரிய சிரமமாக இருக்கிறது. தனுஷ்கோடி பகுதிக்கும், தலைமன்னாருக்கும் 12 கடல் மைல்கள் இருக்கின்றன. அதிகபட்சமாக 27 கடல் மைல்கள் கோடியக்கரைக்கும் இலங்கைக்கும் இருக்கின்றது. எனவே, எல்லை என்பது ஒரு சீராக இல்லாத நிலையில், எல்லையை வகுப்பது என்பது, எல்லையைத் தாண்டுகிறார்கள் என்பதுகூட இன்றைக்கு மிகப் பெரிய இயற்கையான சிக்கல் இருக்கிற ஒரு நிலையில், அந்தப் பகுதியை மீன்பிடி மண்டலமாக மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு மீனவர்கள் மீன் பிடிப்பதற்கான அனைத்துப் பாதுகாப்பையும் வழங்க வேண்டும். ஒவ்வொரு நாட்டினுடைய கடத்தல் போன்ற பல்வேறு பாதுகாப்புக் காரணங்கள் இருந்தால் அதற்கான நடவடிக்கையை அந்த நாட்டினுடைய கடல் எல்லைக்குள்ளாகவே செய்துகொள்ள வேண்டும் என்பதையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டு இதை நாங்கள் வரவேற்கிறோம்.

அந்த அடிப்படையில் தமிழக அரசு முன்வைத்திருக்கிற இந்தத் தீர்மானத்தை வரவேற்று, கச்சத் தீவுப் பிரச்சினையில்கூட கடந்த காங்கிரஸ் கட்சி அரசு, அவர்களால் போடப்பட்ட அந்த வழக்கிலே, அவர்களால் போடப்பட்ட Affidavit–ல் ஒரு தவறான கருத்தை முன்வைத்திருக்கிறார்கள். கடந்த காங்கிரஸ் கட்சி அரசாக இருந்தாலும் சரி அல்லது இன்றைக்கு இருக்கக்கூடிய பாரதிய ஜனதா கட்சி அரசாக இருந்தாலும் சரி, கச்சத் தீவுப் பிரச்சினையில் ஓர் உறுதியான நிலையை மேற்கொள்ளவில்லை. கச்சத் தீவு நமக்குத் திரும்ப கிடைக்கிற வரை, மீனவர்களுடைய பிரச்சினை என்பது தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையாக, அது மழை விட்டாலும் தூவானம் தொடர்வதைப் போல தமிழ்நாட்டு மீனவர்கள் மீண்டும், மீண்டும் கைது செய்யப்படுவதற்கும், தாக்கப்படுவதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்துவிடும். எனவே, கச்சத் தீவில் பழைய காங்கிரஸ் அரசாக இருந்தாலும் சரி,

[திரு. சு. குணசேகரன்] [2014 டிசம்பர் 5

இன்றைக்கு இருக்கிற பாரதிய ஜனதா அரசாக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வை, தமிழக அரசு போட்டிருக்கிற வழக்கை ஆதரித்து, அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அதைப்போல, இப்போது நமது பாரம்பரிய மீன்பிடி உரிமையையும் நிலைநாட்டுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 4—40*

இன்றைக்கு காவேரி நதியில் மேகதாதுவில் இரண்டு அணைகளை கட்டுவதற்கு கர்நாடக அரசு முயற்சிகளை மேற்கொண்டு இருப்பதோடு மட்டுமல்ல, இன்னும் பல இடங்களில் தடுப்பணைகளைக் கட்டுவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது. அதைப் பற்றிய ஒரு விரிவான முன்னுரையை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இங்கே விரிவாக வாசித்தார்கள். காவேரியினுடைய பிரச்சினை ஆதியிலிருந்து இதுவரை தொடர்ந்திருக்கின்ற பல்வேறு பிரச்சினைகள் பற்றியும், தமிழக அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளையெல்லாம் சுட்டிக்காட்டினார்கள். அதை நான் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன்.

ஆனால், அதேநேரத்தில் 1956 ஆம் ஆண்டு, பல மாநிலங்களுக்கிடையே ஏற்பட்ட நதி நீர் ஒப்பந்தத்தின் அடிப்படையில், அந்த ஒப்பந்தத்திலே மாநிலங்களுக்கு இடையே நதி நீர்ப் பிரச்சினை ஏற்பட்டால் நடுவர் மன்றம் அமைக்கலாம் என்ற ஷரத்து இருக்கிறது. அந்த ஷரத்தைத்தான் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. காத்தமுத்து அவர்கள் முதன்முதலிலே நாடாளுமன்றத்திலே அவர் கருத்தாக வெளியிட்டு, நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென்று சொன்னார். அதற்குப் பின்னர் அதை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் 1990 ஆம் ஆண்டில் 110 கிலோ மீட்டர் தூரம் மனித சங்கிலிப் போராட்டம் நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. 1990 ஆம் ஆண்டு திரு. வி.பி. சிங் பிரதமராக இருந்த நேரத்தில்கூட உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்ததற்குப் பின்னால் அந்தத் தீர்ப்பைச் செயல்படுத்துவதற்கு நாடாளுமன்றத்திலே ஒரு வாக்கெடுப்பு நடந்த நேரத்தில் தமிழகத்தினுடைய அன்றைய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய நாகை நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர்

2014 டிசம்பர் 5] [திரு. சு. குணசேகரன்]

திரு. செல்வராஜ் அவர்கள் மட்டும்தான் நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென்ற அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தார். இப்படி இந்திய கம்யூனிஸ்டு கட்சியும், அங்கு இருக்கக்கூடிய விவசாய அமைப்புகளும் தொடர்ந்து ஒரு சரியான வழி காட்டுதலை அந்தக் காவேரி டெல்டா பிரச்சினையில் எடுத்திருக்கிறார்கள்.

அதற்கு அரசு என்ற அடிப்படையில் நமது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் உள்ளிட்ட இந்த அரசும் ஒரு சரியான நடவடிக்கையை மேற்கொண்டு இந்தத் தீர்ப்புகளைப் பெற்றதோடு மட்டுமல்லாமல் அரசிதழிலும் வெளியிடச் செய்திருக்கிறோம். ஆனாலும் கர்நாடக அரசைப் பொறுத்தவரையில் காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்காத காரணத்தால், நமக்கு மாதா மாதம் வழங்க வேண்டிய தண்ணீரைக்கூட இப்போதுத் தர மறுக்கிறார்கள். அங்கிருக்கக்கூடிய உபரி நீரைத் தருகின்றார்களே தவிர, மாதா மாதம் வழங்க வேண்டிய தண்ணீரைத் தருவதற்கு மிகப் பெரிய போராட்டங்களை நடத்த வேண்டிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம். பல தடைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில்தான் இப்போது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதைப் போல மீண்டும் காவேரி உப நதிகளிலும் காவேரி நதியிலும் நீர் மின் நிலையங்களை அமைக்கிறோம் என்ற அடிப்படையில் மேகதாதுவிலே 2 அணைகளைக் கட்டுவதற்கான முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள். நடுவர் மன்றம் அமைப்பதற்கு முன்னாலேயே 1988 ஆம் ஆண்டு மேகதாதுவில் நீர் மின் நிலையம் அமைக்கிறோம் என்ற அடிப்படையில் ஓர் அனுமதியைப் பெற்றிருக்கிறார்கள். அந்த அனுமதியை வைத்துக்கொண்டு கட்டுவோம் என்ற அடிப்படையில் அவர்களுடைய நடவடிக்கை இருக்கிறது. ஆனாலும் நடுவர் மன்றம் அமைத்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததற்குப் பின்னால், சீராய்வு மனுக்களெல்லாம் அங்கே போடப்பட்டு நிலுவையில் இருக்கின்ற இந்த நேரத்தில், அந்தப் பழைய அனுமதி செல்லாது என்பதையும் நாம் எச்சரிக்கை உணர்வோடு பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில் அந்த நீர் மின் நிலையங்களை மட்டுமல்ல எதிர்காலத்தில் இப்படிப்பட்ட தடுப்பணைகள் கட்டுவதை நாம் தடை செய்ய வேண்டும்.

[திரு. சு. குணசேகரன்] [2014 டிசம்பர் 5

அதைப்போல, கேரளாவும் அதனுடைய பங்கிற்கு இப்போது ஒரு தடுப்பணையைக் கட்டுவதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. இப்படி 1956 ஆம் ஆண்டு பன் மாநில நதி நீர் ஒப்பந்தத்திற்கு விரோதமாக ஒரு மாநில அரசினுடைய உரிமையைப் பறிக்கின்ற விதமாக அதனுடைய அனுமதியைப் பெறாமல் இப்போது இப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பது என்பது இந்திய நாட்டிற்கு உள்ளேயே நடக்கின்ற பிரச்சினையா என்ற சந்தேகம்கூட எழக்கூடிய ஒரு நிலை உருவாகியிருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில் மத்திய அரசு இதிலே ஒரு தெளிவான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போது நாம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் நேற்றைக்குக்கூட இந்திய கம்யூனிஸ்டு கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அதைப்போல மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, அதனுடைய விவசாய சங்க அமைப்புகள் எல்லாம் முன் முயற்சி எடுத்து 500 மையங்களுக்கு மேலாக இரயில் மறியல், சாலை மறியல் போராட்டங்களை நடத்தி, பல இலட்சக்கணக்கான மக்கள் அந்தப் போராட்டங்களில் கலந்துகொண்டார்கள். எனவே இது காவேரி டெல்டா பகுதிகளில் இருக்கக்கூடிய அனைத்துப் பகுதி மக்களுடைய மிகப் பெரிய உணர்வாக இருக்கிறது ஆனால் இதை மதிக்காத, மத்தியிலே இருக்கக்கூடிய பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த கர்நாடக அமைச்சர் திரு. ஆனந்தகுமார் அவர்கள், இப்போது நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு எப்படியாவது இந்த அணைகளைக் கட்டி முடிப்போம் என்று சவால் விட்டிருக்கிறார். இதையும் நமது தமிழக அரசு எச்சரிக்கை உணர்வோடு பார்க்க வேண்டும் மத்தியிலே காங்கிரஸ் கட்சி அரசாக இருந்தாலும், பாரதிய ஜனதா கட்சி அரசாக இருந்தாலும் காவேரிப் பிரச்சினையாக இருந்தாலும் சரி அல்லது தமிழக மீனவர்கள் பிரச்சினையாக இருந்தாலும் சரி, அதில் தமிழ்நாட்டிற்கு விரோதமான கொள்கை உடையவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அதில் நாம் எச்சரிக்கை உணர்வோடு இருந்து உச்ச நீதிமன்றத்தினுடைய துணையோடு மீண்டும் இந்த அணைகள் கட்டுவதைத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அதற்கு நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்கு சரியான நேரத்தில் இந்த இரண்டு சரியான தீர்மானங்களை முன்மொழிந்திருக்கிறார்கள். இதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பாராட்டி, நான் வாழ்த்தி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 4—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை அரசு கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழக மீனவர்கள், எல்லை தாண்டி, தங்கள் எல்லைக்குள்ளே நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லி, பல ஆயிரக்கணக்கான பேர்களைக் கைது செய்து, சில நூறு பேர்களை சுட்டுக் கொன்று, பல பேரை ஆயுதங்களால் கொலை செய்து கடலிலே வீசி எறிந்திருக்கிறார்கள். பல நூறு கோடி ரூபாய் பெருமானமுள்ள படகுகளையெல்லாம் பறிமுதல் செய்து அவர்கள் கட்டுப்பாட்டிலே வைத்திருக்கிறார்கள், ஏராளமான பேரை படுகாயப்படுத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமை தொடர் வரலாற்றின் ஒரு பகுதியாகத்தான் 5 மீனவர்கள்மீது போதைப்பொருள் கடத்தியதாக ஒரு பொய் வழக்கைப் போட்டு, அவர்களுக்குக் கடந்த 30—10—2014 அன்று தூக்கு தண்டனை வழங்கப்பட்டது. இதுசம்பந்தமாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த மீனவர்கள் அல்லலுக்கு ஆளாக்கப்பட்டபோது, அவர்களுடைய குடும்பப் பாதுகாப்பிற்கு, அவர்களின் வழக்கை நடத்துவதற்கு, அந்த மீனவர்களை விடுதலை செய்வதற்கு தமிழக அரசு தன்னுடைய பங்கினை ஆற்றியிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அந்த இலங்கை நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்தபோது, இராமேஸ்வரமே ஏதோ சுனாமி வந்தது போல கொதித்தெழுகிற நிலைமை ஏற்பட்டது. தமிழகத்தில் இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு போராடி, பல கட்ட நடவடிக்கைகளுக்குப் பிறகு இலங்கை அரசு அந்த மீனவர்களைத் தூக்கு தண்டனையிலிருந்து விடுவித்து, பொது மன்னிப்பு அளித்து அவர்களை விடுதலை செய்திருக்கிறது. ஒரு நாகரிக அடிப்படையில் மத்திய அரசுக்கு இன்றைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தை இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்துள்ளார்கள். ஆனால், நான் இங்கே பதிவு செய்ய விரும்புவது என்னவென்றுசொன்னால், மனித நேய மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அன்பிற்குரிய மாண்புமிகு ஜவாஹிருல்லா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தப் பிரச்சினையிலே, மத்திய

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2014 டிசம்பர் 5

அரசினுடைய செயல்பாடு எப்படி இருந்தது என்பதை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். விடுதலை செய்த பிறகு அவர்கள் டெல்லிக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். வெளிநாடு சுற்றுப் பயணத்திலே கடந்த ஒரு வாரமாக இருந்த பாரதப் பிரதமர் அவர்கள் அன்றைக்குத்தான் டெல்லி திரும்பியிருக்கிறார்கள். அவர் டெல்லி திரும்புகிற நேரம் பார்த்து, அவர்களை விடுதலை செய்ய வைத்து, அங்கே அழைத்துச் செல்கிறார்கள். பிறகு, நேரடியாக அங்கேயிருந்து தமிழகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். எதற்காக டெல்லிக்கு அழைத்துச் சென்றார்கள் என்பதற்கான சரியான விளக்கத்தை மத்திய அரசால் கொடுக்க முடியவில்லை. சொல்லப்போனால், பாரதப் பிரதமர் அவர்கள் டெல்லிக்கு வருகிற நேரத்தில் அவர்களை விடுதலை செய்து அவர்களை அங்கே சந்திக்க வைப்பதற்காக, அவர்களுடைய விடுதலையைக்கூட சில நாட்கள் தாமதப்படுத்தினார்களோ என்ற ஐயம் தமிழகத்திலே இருக்கிற மீனவர்கள் மத்தியிலே இருக்கிறது என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

எனவே, இப்படிப்பட்ட ஒரு மலிவான அரசியல் வியாபாரத்தில் மத்திய அரசு, அதுவும் தமிழக மீனவர்களுடைய உயிர் பிரச்சினையிலே ஈடுபடுவது ஒரு நேர்மையான செயல் அல்ல என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையில், இன்றைக்கு அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிற நிலைமை தமிழகத்திலே இருக்கிற அனைவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே, அந்தத் தீர்மானத்தில் சுட்டிக்காட்டியதைப்போல, நம்முடைய ஒன்றுபட்ட குரல், தமிழக மீனவர்கள் மட்டுமல்லாமல், அனைத்து சமூகத்தைச் சார்ந்திருக்கிற அரசியல் கட்சிகள் அனைத்தும் இணைந்து போராடியதன் பலனாக அந்த விடுதலை இன்றைக்குக் கிடைத்திருக்கிறது. அதேபோல, இன்றைக்கு நம்முடைய மீனவர்கள் அதற்குப் பிறகும் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். எப்போதெல்லாம் அவர்கள் மீன் பிடிக்கச் செல்கிறார்களோ கைது செய்யப்படுவது, தாக்கப்படுவது என்பது தொடர் கதையாக இருக்கிறது.

எனவே, இன்றைக்கு நிலைமை என்னவென்று சொன்னால், தென் மாவட்டங்களில் இருக்கிற மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கே அஞ்சுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உயிருக்குப்

2014 டிசம்பர் 5] [திரு. க. பாலகிருஷ்ணன்]

பாதுகாப்பற்ற நிலைமை ஏற்படுகிறது. மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கச்சத் தீவை மீட்க வேண்டும் என்ற கருத்து ஒரு பக்கம் இருந்தாலும், இன்னொரு பக்கம் நாங்கள் வற்புறுத்த விரும்புவது, இரண்டு நாடுகளிலே இருக்கக்கூடிய மீனவர்கள் மத்தியிலே பேச்சுவார்த்தை நடத்தி, ஓர் உடன்பாடு காணுவதன் மூலமாகவே அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றும் ஏற்கெனவே நம்முடைய தமிழக அரசும் இந்த நிலையை எடுத்திருக்கிறது. இரண்டு நாட்டு மீனவர்களும் அங்கே சந்தித்து, இரண்டு கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறார்கள். அன்றைக்கு அவ்வளவு தூரம் ஒரு மலிவான அரசியல் நாடகத்தை நடத்திய மத்திய அரசு, இந்தப் பேச்சுவார்த்தையை நடத்தி, தமிழக மீனவர்களுடைய நிரந்தரமான தொழில் பாதுகாப்புக்கு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 4–50*

அதைப்போல, தீர்மானத்தின் கடைசியிலே சுட்டிக்காட்டியிருப்பதைப்போல, சிறையிலே இருக்கிற 38 மீனவர்களையும், 79 படகுகளையும் விடுவிக்கிற நடவடிக்கையினை மத்திய அரசு எடுப்பதற்கு வற்புறுத்துகிற அந்தத் தீர்மானத்தை இந்த நேரத்திலே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே முழுமையாக நாங்கள் ஆதரிக்கிறோம்.

அதேசமயம், நான் இந்த நேரத்தில் தமிழக அரசுக்கு இன்னொரு வேண்டுகோளையும் வைக்கிறேன். அதை நீங்கள் கருணை அடிப்படையிலே, அருள்கூர்ந்து பரிசீலிக்க வேண்டும். கடந்த 30–10–2014 அன்று தூக்கு தண்டனை குறித்த அந்தச் செய்தி வந்தபோது ஏற்பட்ட கொந்தளிப்பிலே ஒருசில சம்பவங்கள் நடந்ததைக் காரணம் காட்டி, இரயில்வே போலீஸார்மூலம் சில வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அருள்கூர்ந்து அந்த மீனவர்களின்மீது போடப்பட்டிருக்கிற வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, அந்தத் தீர்மானத்தை முழுமையாக நாங்கள் வரவேற்கிறோம்.

அடுத்து, காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பு. காவேரி பிரச்சினை தொடர்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற தீர்மானத்தையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன்.

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2014 டிசம்பர் 5

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறபோது, கிட்டத்தட்ட, வரலாற்று ரீதியாக அதிலே ஏற்பட்டிருக்கிற, எல்லாவிதமான பிரச்சினைகளையும், வரிசை அடிப்படையிலே, அனைத்தையும் தொகுத்து, ஓர் ஆவணமாக இங்கே அளித்திருக்கிறார்கள். அதில் இருக்கிற எல்லா பிரச்சினைகளும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. எனவே, அந்தப் பின்னணியிலே அந்தத் தீர்மானத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டு ஆதரிக்கிறோம்.

நேற்றைக்குக்கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைபோல, பல்வேறு அரசியல் கட்சிகளும், அனைத்து விவசாய அமைப்புகளும் சேர்ந்து ஒரு வலுமிக்க போராட்டத்தை டெல்டா மாவட்டங்களில் நடத்தியிருக்கின்றனர். இன்றைக்கு ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. அடுத்து, காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு. ஏறக்குறைய 16, 17 ஆண்டுகளுக்கு மேலாக வாதாடி, போராடி அந்தத் தீர்ப்பைப் பெற்ற பிறகும்கூட, அதனுடைய பலனை நாம் இன்னமும் முழுமையாக அனுபவிக்க முடியாமல் இருக்கிறோம். இதற்கு அடிப்படையான காரணம் என்னவென்று சொன்னால், இன்றைக்கு இருக்கிற பி.ஜே.பி. அரசானாலும் சரி, அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அரசானாலும் சரி, அவர்கள் காவேரி பிரச்சினையிலே, தமிழகம் சம்பந்தப்பட்ட பிரச்சினையிலே, ஒரு நாணயத்தினுடைய இரண்டு பக்கங்களைப்போலத்தான் செயல்பட்டிருக்கிறார்களே தவிர, அதாவது நம்முடைய உரிமையைத் தட்டிப் பறிப்பதிலே அல்லது நம்முடைய உரிமையை நிறைவேற்றுவதிலே அவர்கள் சாதகமான நிலை எடுக்கவில்லை என்பதை கடந்தகால வரலாறு தெரிவிக்கிறது.

19–2–2013 அன்று காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு மத்திய அரசிதழிலே வெளியிட்ட பிறகும்கூட, இன்னும் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படவில்லை. நீர் ஒழுங்குப்படுத்துகிற, முறைப்படுத்துகிற அந்தக் குழு அமைக்கப்படவில்லை. இதையெல்லாம் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுதான், கர்நாடக அரசு, எப்படியாவது குறுக்குசால் ஓட்டி, இந்த நடுவர் மன்றத் தீர்ப்பைக் கிடப்பிலே போட்டுவிட வேண்டுமென்று முயற்சித்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போல, 4 நீர் மின் திட்டங்களுக்கு மத்திய

2014 டிசம்பர் 5] [திரு. க. பாலகிருஷ்ணன்]

அரசினுடைய நீர் மின் வாரியம் ஒப்புதல் அளித்திருக்கிறது. ஆனால், அந்த நான்கையும் ஏக காலத்தில் தமிழக அரசு, கர்நாடக அரசு இரண்டும் ஒத்தக் கருத்தோடு நிறைவேற்ற வேண்டுமென்கிற அடிப்படையிலேதான் அது சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, கர்நாடக அரசு தானெடுத்த முடிவாக அதை நிறைவேற்றுவதற்கு, நடுவர் மன்றத் தீர்ப்பிலேயும் இடமில்லை, ஏற்கெனவே இதற்கு ஒப்புதல் வழங்கியிருக்கக்கூடிய மத்திய அரசினுடைய நீர்மின் வாரியத்தினுடைய ஒப்புதலிலேயும் அந்த அனுமதி இல்லை. ஆகவே, இன்றைக்கு அங்கே நீர் மின் நிலையத்தைக் கட்டுவது என்று ஒரு பக்கம் சொல்லிக்கொண்டு, இன்னொரு பக்கம் குடிநீர்ப் பிரச்சினை என்கிற பிரச்சினையைக் கிளப்புகிறார்கள். நடுவர் மன்றத் தீர்ப்பினுடைய ஆவணத்தைப் படிக்கிறபோது, தமிழ்நாட்டினுடைய நீர் தேவை என்ன, கர்நாடகத்தினுடைய நீர் தேவை என்ன என்பதற்காக, நம்முடைய கோரிக்கைகளைப் பரிசீலித்தார்கள், கர்நாடக அரசாங்கத்தினுடைய கோரிக்கைகளைப் பரிசீலித்தார்கள். பாசனத்திற்கு எவ்வளவு தண்ணீர், குடிநீருக்கு எவ்வளவு தண்ணீர், தொழில் பாதுகாப்புக்கு எவ்வளவு தண்ணீர் தேவை என்பதையெல்லாம் கணக்கிட்டுத்தான், இருக்கிற தண்ணீரைப் பகிர்கிறபோது, பாசனத்திற்கு இவ்வளவு தண்ணீர் என்கிற அடிப்படையிலேயும், தொழிற்சாலைகளுக்கு இவ்வளவு தண்ணீர் என்கிற அடிப்படையிலேயும், குடிநீருக்கு என்று கர்நாடகத்திற்கு 1.85 டி.எம்.சி. அடி தண்ணீர், தமிழ்நாட்டிற்கு 2.73 டி.எம்.சி. அடி தண்ணீர் என்பதையெல்லாம் சேர்த்துதான், அந்த நடுவர் மன்ற இறுதி ஆணையிலே அவர்கள் பட்டியலை வெளியிட்டிருக்கிறார்கள். எனவே, ஏற்கெனவே குடி தண்ணீருக்கான கோரிக்கை வைக்கப்பட்டு, அதையும் பரிசீலித்து நடுவர் மன்றம் இறுதியாகச் சொல்லி முடித்த பிறகு, இப்போது நாங்கள் குடிநீருக்காகத் தனி அணை கட்டுகிறோம் என்று சொல்வது முழுக்க, முழுக்க நியாயமற்றது. நடுவர் மன்றத் தீர்ப்பைச் செல்லாததாக்குகிற அனைத்து முயற்சிகளிலும் இன்றைக்கு கர்நாடகம் முயற்சி எடுப்பது என்பது நியாயமானது அல்ல என்பதை நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம். எனவே, இந்த நேரத்தில் அவர்களுடைய நோக்கம் என்னவென்று சொன்னால், ஏதாவது காரணம் காட்டி இந்த இறுதித் தீர்ப்பை நிறுத்தி வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள்.

*பிற்பகல் 4–55*

அதேபோல, காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பினுடைய எல்லைக்குள்ளே வருகிற பாம்பாற்றிலேயும் பட்டிசேரி என்கிற இடத்திலே ஒரு சிறிய நீர்த்தேக்கத்தினைக் கட்டுவதற்கு கேரள அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது. எனவே, கேரள அரசு முயற்சித்துக்கொண்டிருக்கிற பாம்பாற்றின் குறுக்கே அணை கட்டுகிற அந்தத் திட்டமானாலும், கர்நாடக அரசு மேகதாது என்கிற இடத்திலே இரண்டு நீர்த்தேக்கங்கள் மற்றும் தடுப்பு அணைகள் கட்டுகிற அந்த முயற்சியானாலும், அவற்றைத் தடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிற அந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்புவதனால் மட்டுமே மத்திய அரசு தமிழகத்திற்கு சாதகமான முடிவு எடுத்துவிடமாட்டார்கள் என்பதுதான் கடந்த கால அனுபவம். அதிலே பி.ஜே.பி. அரசுக்கும், காங்கிரஸ் அரசுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. எனவே, இந்தச் சட்டமன்றப் பேரவையில் நாம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவது, தமிழகத்தினுடைய உரிமையைப் பெற்றுத் தருவதிலே மத்திய அரசு உறுதியான நிலையை எடுக்கவில்லை என்று சொன்னால், நாங்கள் அடுத்தக் கட்ட நடவடிக்கைக்குப் போவோம் என்பதை வலியுறுத்துகிற வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே அனைத்துக் கட்சித் தூதுக் குழு டெல்லிக்குச் சென்று, பாரதப் பிரதமரை வற்புறுத்துகிற ஒரு முதல் கட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, இந்த இரண்டு தீர்மானங்களையும் ஆதரித்து விடைபெற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற, இலங்கை சிறையிலே வாடிக் கொண்டிருக்கும் 38 மீனவர்களை விடுவிக்கப்படத் தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்கின்ற கோரிக்கைக்கும், அங்கே பிடிபட்டிருக்கின்ற 79 மீன்பிடிப் படகுகளை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்றும், இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட கச்சத் தீவை மீண்டும் மீட்கப்பட வேண்டும் என்றும், 5 தமிழக மீனவர்களை விடுதலை செய்வதற்கு மாநில அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும்,

2014 டிசம்பர் 5] [திரு. வி.சி. சந்திரகுமார்]

அதேநேரத்திலே அதற்கு ஒத்துழைப்பைக் கொடுத்த பாரதப் பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்களுக்கும், மத்திய அரசுக்கும் பாராட்டையும், நன்றியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, முன்மொழியப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பிலே நாங்கள் மனதார வரவேற்கின்றோம்.

அதேபோல, காவேரி நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பை ஏற்று, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்க வேண்டும் என்கின்ற இந்தத் தீர்மானத்தையும், பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு கட்டுகின்ற அணைத் திட்டத்தை மத்திய அரசு அனுமதிக்கக்கூடாது என்று சொல்லியிருக்கின்ற இந்தத் தீர்மானத்தையும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பிலே நாங்கள் வரவேற்கின்றோம்.

அதேநேரத்திலே, தமிழக மீனவர்கள் போதைப் பொருள் வழக்கிலே கைது செய்யப்பட்டிருந்த நேரத்திலே, தமிழகத்திலே இருக்கின்ற ஒட்டுமொத்த அரசியல் கட்சிகளும், மீனவர் அமைப்புகளும், அரசியல் சாரா அமைப்புகளும், கடுமையாக தங்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தியதன் விளைவே இலங்கையிலே இருக்கின்ற ராஜபக்சே அரசு பணிந்து அவர்களை அனுப்பியிருக்கிறது என்பதுதான் எங்களுடைய கருத்தாக இருக்கிறது. அதேநேரத்திலே, சிறைப்பிடிக்கப்பட்டிருக்கின்ற மீனவர்களுடைய படகுகள் தொடர்பாக, இன்று ஒவ்வொரு பிரச்சினையையும் பார்க்கின்றபொழுது, 2009 ஆம் ஆண்டு வரையிலும் தமிழினத்தினுடைய தலைவராக விளங்கிக்கொண்டிருந்த மாவீரன் பிரபாகரன் வாழ்ந்த காலம் வரையிலும் இலங்கை அரசாக இருக்கட்டும், இலங்கை இராணுவமாக இருக்கட்டும் நம்முடைய மீனவர்களைத் தொட்டுப் பார்க்கக்கூட அவர்களாலே அந்த நேரத்திலே முடியவில்லை. அதன் பிறகு, இந்த 5 ஆண்டு காலத்திலேதான் இவ்வளவு பிரச்சினைகள் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கின்றன. அதேபோல, இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று சொன்னால், கச்சத் தீவை மீட்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பல முறை இந்தச் சட்டமன்றத்திலே நாம் தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பியிருந்தும் அதிலே இன்னும் உறுதியான நிலைப்பாட்டை

[திரு. வி.சி. சந்திரகுமார்] [2014 டிசம்பர் 5

மத்திய அரசு எடுக்கவில்லை என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. எனவே, மாநில அரசு கச்சத் தீவை மீட்பதற்கு மத்திய அரசை வலியுறுத்துகின்ற அந்த நடவடிக்கைக்கு தேசிய முற்போக்கு திராவிட கழகம் மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள ஒட்டுமொத்த மக்களும் இந்த அரசுக்குத் துணையாக இருப்பார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 5—00

அதேபோல, அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி, அது காவேரி பிரச்சினையாக இருக்கட்டும் அல்லது மீனவர் பிரச்சினையாக இருக்கட்டும், அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் அழைத்துச் செல்ல வேண்டும். ஏன் என்று சொன்னால், கேரளாவில் ஒரு பிரச்சினை என்று சொன்னால், அந்த மாநில முதலமைச்சர் அனைத்துக் கட்சிகளையும் அழைத்துக்கொண்டு டில்லிக்குச் செல்கிறார். அதேபோல, கர்நாடகத்தில் ஒரு பிரச்சினை என்றால் கர்நாடக முதலமைச்சர் அனைத்துக் கட்சிகளையும் அழைத்துக்கொண்டு டில்லி செல்கிறார். அப்படி எல்லோரும் சென்றால்தான் அந்தக் காரியம் நடக்குமா என்றுகூட உங்கள் மனதில் தோன்றலாம். நாங்கள் சொல்வது என்னவென்றால், அப்படி அனைத்துக் கட்சிகளையும் அழைத்துக் கொண்டு போகின்றபோது, அங்கே இருக்கின்றவர்கள் நம்மைப் பார்க்கும் பார்வை வித்தியாசப்படும். ஏதோ, ஒரு கட்சி அல்லது ஆளுகின்ற கட்சி மட்டுமே வந்தது என்பதையும்மீறி, தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த கட்சிகளும் ஒன்றுசேர்ந்து வந்திருக்கின்றன என்கிற ஓர் எண்ணம் மத்தியில் ஆட்சியில் இருப்பவர்களுக்கு ஏற்படும் என்பதையும் இந்த நேரத்தில் என்னுடைய கருத்தாகப் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், காவேரி நடுவர் மன்றத்தின் ஆணை அரசிதழில் வெளியிட்ட பிறகுகூட, அதனுடைய முழுப் பயன் நமக்குக் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம், காவேரி மேலாண்மை வாரியத்தையும் நீர் முறைப்படுத்தும் குழுவையும் அமைக்காததுதான் என்பது எங்களுடைய கருத்து. அதன்காரணமாகத்தான் இன்றைக்கு கர்நாடகா மேகதாதுவில் இரண்டு அணைகள் கட்ட முயற்சிக்கிறது. அந்த இரண்டு அணைகள் கட்ட முயற்சிப்பதன் காரணமாக இன்றைக்கு டெல்டா மாவட்டங்களில் கொந்தளிப்பான சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

2014 டிசம்பர் 5] [திரு. வி.சி. சந்திரகுமார்]

நேற்றுகூட பார்த்தீர்கள் என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, தேசிய முற்போக்கு திராவிட கழகம் மற்றும் பிற கட்சிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து அங்கே இருக்கின்ற பல இடங்களில் போராட்டங்கள் நடத்தியிருக்கின்றன. எங்களுடைய, மயிலாடுதுறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள் தலைமையில்கூட கடந்த 29 ஆம் தேதி இரயில் மறியல் போராட்டத்தில் கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு கைதானார்கள். இது எதற்காக என்று சொன்னால், ஒரு கட்சி என்கிற அடிப்படையில் இல்லாமல், டெல்டா பகுதியில் வாழுகின்ற ஒட்டுமொத்த விவசாயிகளும் இந்தப் பிரச்சினையை இன்றைக்குக் கையில் எடுத்துக்கொண்டு போராடிக்கொண்டிருப்பதால்தான் இந்தப் போராட்டத்திற்கு மிகப் பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது என்பதை மனதிலேகொண்டு, அரசு இதற்கான நடவடிக்கையைத் துரிதபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கேரளாவில் பாம்பாற்றின் குறுக்கே கட்டப்படுகின்ற அந்த அணையையும், கர்நாடக அரசு கட்டுகின்ற அந்த அணையையும் தடுத்து நிறுத்த மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென கேட்டு அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடல் நீர் அள்ள, அள்ளக் குறையாததைப் போல, மீனவர்களின் வாழ்வு எப்போதும் வளமாக வளரும், நிறைவாக இருக்கும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் மீனவர்கள் முன்னேற்றம் அடைய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். மீனவ மக்களை கரைமேல் சிரிக்க வைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அவர்களின் கண்ணீரைத் துடைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

சதி செய்து காவேரியைத் தடுத்தபோதும், மதி கொண்டு தடை உடைத்து, காவேரியை தமிழ் மண்ணிலே ஜதி செய்ய, இன்னொரு விதி செய்ய, செயல் வீரமிக்கவர் மாண்புமிகு அம்மா அவர்கள். குடகுவிட்டு குதித்து வரும் காவேரியை அடகு வைத்த தவற்றை தன் அறிவால் சரி செய்து, மதியால் புது விதி செய்து, தலைக் காவேரியை தமிழகம் அழைத்து வந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். பிறந்தோர் அனைவரும் சிறந்தோர் ஆவதில்லை. சிறந்தோர் அனைவரும் மக்கள் மனங்களில் நிறைந்தோர்

[பேரவைத் தலைவர்] [2014 டிசம்பர் 5

ஆவதில்லை. நிறைந்தோர் எவருமே மனித நெஞ்சங்களில் நிரந்தரம் ஆவதில்லை. பிறந்து, சிறந்து, நிறைந்து, நிரந்தரமாய் செந்தமிழர் இதயமெல்லாம் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கும் எங்கள் அம்மாவுக்கு ஒருபோதும் எவரும் நிகராவதில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்றைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள சிறப்பான தீர்மானங்களை வரவேற்று மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளோடு என்னுடைய கருத்துகளையும் இணைத்துக்கொள்கிறேன்.

'மீனவர் பிரச்சினை' குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

'காவேரி பிரச்சினை' குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 5–05*

## 8. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *8–12–2014* அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.